Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 12-13

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

23 ஜமாதியுஸ் ஸானி - 1 ரஜப் 1438 ஹிஜ்ரி கமரி 23-30 அமான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

23-30 மார்ச் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**முன்னர் உயிருடன் இருந்ததைப் போன்று இப்போதும் உயிருடன் இருக்கும் இறைவனே நம் இறைவன். முன்னர் அவன் பேசிக் கொண்டிருந்ததைப் போன்று இப்போதும் அவன் பேசுகின்றான். முன்னர் அவன் கேட்டுக் கொண்டிருந்ததைப் போன்று இப்போதும் கேட்கின்றான். இந்தக் காலத்தில் அவன் கேட்கின்றான். ஆனால் பேசுவதில்லை என்பது முட்டாள்தனமான சிந்தனையாகும். நிச்சயமாக அவன் கேட்கவும் செய்கின்றான். பேசவும் செய்கின்றான். அவனுடைய எல்லா பண்புகளும் நிலையானவையாகவும் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவையுமாகும். அவனுடைய எந்தப் பண்பும் செயலிழந்து விடவில்லை. இனி ஒருபோதும் செயலிழந்தும் போகாது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

காதுள்ளவர்களே கேளுங்கள்! அல்லாஹ் உங்களிடம் என்ன நாடுகின்றான்? அது நீங்கள் அவனுக்கே உரியவர்களாகி விட வேண்டும் என்பதைத்தான். வானத்திலோ, பூமியிலோ அவனுக்கு எவரையும் நீங்கள் இணை வைக்காதீர்கள். முன்னர் உயிருடன் இருந்ததைப்போன்று இப்போதும் உயிருடன் இருக்கும் இறைவனே நம் இறைவன். முன்னர் அவன் பேசிக் கொண்டிருந்ததைப்போன்று இப்போதும் அவன் பேசுகின்றான். முன்னர் அவன் கேட்டுக் கொண்டிருந்தைப் போன்று இப்போதும் கேட்கின்றான். இந்தக் காலத்தில் அவன் கேட்கின்றான். ஆனால் பேசுவதில்லை என்பது முட்டாள்தனமான சிந்தனையாகும். நிச்சயமாக அவன் கேட்கவும் செய்கின்றான்; பேசவும் செய்கின்றான். அவனுடைய எல்லா பண்புகளும் நிலையானவையும், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவையுமாகும். இனி ஒருபோதும் செயலிழந்தும் போகாது. அவன் ஈடிணையற்றவன். தனித்தவன். அவனுக்கு மகனோ மனைவியோ இல்லை. இணை இல்லாதவன் அவனே. தனக்கென குறிப்பிட்ட பண்பைக் கொண்டவன் அவனைப்போல் வேறு எவனுமில்லை. அவனுக்கு நிகராக எவனுமில்லை. குணயியல்புகளில் அவனை ஒத்தவன் வேறில்லை.

அவனுடைய ஆற்றல்களில் எக்குறையும் இல்லை. அவன் தொலைவில் இருந்தாலும் நெருக்கமானவன். நெருங்கியிருப்பினும் தொலைவில் உள்ளவன். ஆன்மீகக் காட்சிகளை காண்பவர்களிடத்தில் உருவக வடிவில் அவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும் அவனுக்கு உடலோ உருவமோ இல்லை. அவன் மிக உயரியவன். ஆனால் அவனுக்கு கீழ் எதுவும் இருப்பதாகக் கூற இயலாது. அவன் அர்ஷ் என்னும் அரியணையில் உள்ளான். ஆனால் பூமியில் அவன் இல்லை எனக் கூற முடியாது. அவன் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவன். அவன் உண்மையான புகழுக்குரிய எல்லா பண்புகளின் தோற்றமாவான். எல்லா நன்மைகளின் ஆரம்பமும் எல்லா பொருள்களின் முடிவும் அவனே. எல்லா நாடுகளுக்கும் அவனே எஜமான். முழுமைகள் எல்லாம் அவனிடத்தில் நிறைந்துள்ளன. எல்லா குறைகளிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும் அவன் தூய்மையானவன். பூமியில் உள்ளவர்களும், விண்ணில் உள்ளவர்களும் அனைவரும் வணங்கத்தக்க முழு உரிமை பெற்றவன் அவனே. *(ரிஸாலா அல் வஸிய்யத்)*

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஆக அதாவது, எல்லா உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டுள்ளார்கள். கிறிஸ்தவர்கள் முழு உலகிலும் தப்லீகின் பணியைத்தான் செய்து வருகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களது போதனைகளின் ஒளியில் இது அவர்கள் மீது கடமை இல்லை. ஆனால், நமது போதனைகள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியில் இது நமது கடமைகளில் ஒன்றாக இருக்கின்றது**

## ஹுஸூர் அவர்களின் கனடா சுற்றுப் பயணத்தின்போது 5 அக்டோபர் 2016 -ல் Globel Television Channel -ன் பிரதிநிதி அவர்களுக்கும் ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கும் இடையில் நடைபெற்ற நேர்காணல்

✪ *Globel News Channel* -ன் நிருபர் ஹுஸூர் அய்யதஹுல்லா -ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இரண்டாவது முறையாக கனடா வந்திருக்கின்றார்கள் என்பதை அறிந்து அவர்களை, தான் வரவேற்பதாகக் கூறினார். பின்னர் அவர் ஹுஸூர் அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி இதுவாகும்.

**கேள்வி:** நீங்கள் கனடாவிற்கு வழங்கும் தூதுச் செய்தி என்ன? நீங்கள் பிரதம மந்திரி ஜெஸன்ட் ட்ரோட்டா அவர்களைச் சந்திக்கும்போது அவர்களிடமிருந்து நீங்கள் என்ன கேட்க விரும்புகின்றீர்கள்? உங்களுக்கு பிரதம மந்திரி அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்ப்புகள் இருக்கின்றன?

இந்தக் கேள்விக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அறிந்திருப்பது போன்றே மத்தியக் கிழக்கு நாடுகளின் நிலைமை மோசமானதாக இருப்பதால் உலகின் நிலைமைகள் மிகவும் அபாயகரமானதாக இருக்கின்றது. உலகிலுள்ள எல்லா நாடுகளும் இந்த மோசமான நிலைமைகளின் காரணமாக பாதிப்பிற்காளாகி இருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படுவதற்கு முன்னதாக மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நாம் ஒவ்வொரு தீர்மானத்தையும் எடுக்க வேண்டும். அது அங்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக இருந்தாலும் சரி, அல்லது அது இந்த நாடுகளில் அடைக்கலம் புகுபவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாக இருந்தாலும் சரி, இந்த இரு விஷயங்கள் தொடர்பாகவும் நாம் அதிகமாக சிந்தனை செய்து அவற்றைப் புரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✪ இதனைக் கேட்ட நிருபர் இவ்வாறு கேட்டார். முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது என்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று பொருளா? இது தொடர்பாக கனடா எந்த நடவடிக்கையும்

(தொடர்ச்சி 5 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

பிப்ரவரி 20 ஆம் தேதி ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் அறியப்படுகிறது. இது மிகவும் மகத்தான முன்னறிவிப்பாகும். இதில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு மகத்தான மகன் பிறக்கப் போவது பற்றி செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. அவரது எண்ணற்ற சிறப்புத் தன்மைகள் விளக்கப்பட்டிருந்தன. அவர்கள் நீண்ட வயதைப் பெறுவார்கள் என்ற செய்தி இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிலைநாட்டிய ஜமாஅத், முஸ்லிஹ் மவ்வூதின் காலக்கட்டத்தில் அசாதாரண வளர்ச்சியைப் பெறும் என்ற முன்னறிவிப்பு இருந்தது. வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களின் 52 வருட கிலாஃபத் காலக்கட்டத்தில் முன்னறிவிப்பின் எல்லா பகுதிகளும் சொல்லுக்குச் சொல் நிறைவேறியது என்பதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு சாட்சி பகர்கிறது. நீதியை விரும்பும் ஒருவருக்கு ஆன்மீக ரீதியில் பார்க்கும் கண்ணை உடைய ஒருவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கு இந்த முன்னறிவிப்பே ஒரு பெரிய ஆதாரமாகும்.

உண்மையான ஆன்மாவின் மூலம் சிறப்பிக்கப்படுவார் என்று முன்னறிவிப்பில் இடம்பெற்றுள்ள சொற்களை சான்றாக காட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சில மேற்கோள்களின் ஒளியில் ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய விபரங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

வரக்கூடிய நாள்களில் ஜமாஅத்தின் இந்த முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு கூட்டங்கள் நடக்கும். ஜமாஅத் சகோதரர்கள் அதிகமாக அக்கூட்டங்களுக்கு வர வேண்டும். M.T.A -விலும் இது தொடர்பான நிகழ்ச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. அதை அவர்கள் கேட்க வேண்டும். அதன் மூலம் இந்த முன்னறிவிப்பு குறித்த ஆழமான அறிவு அவர்களுக்கு கிடைக்கும். இந்த முன்னறிவிப்பில் எண்ணற்ற அடையாளங்கள் உள்ளன. மிகவும் மகிமையுடன் அந்த அனைத்தும் அடையாளங்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் நிறைவேறி விட்டன.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**17 பிப்ரவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **17 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நாம் அறிந்திருப்பது போன்று பிப்ரவரி 20 ஆம் தேதி ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் அறியப்படுகிறது. இது மிகவும் மகத்தான முன்னறிவிப்பாகும். இதில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு மகத்தான மகன் பிறக்கப் போவது பற்றி செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. அவரது எண்ணற்ற சிறப்புத் தன்மைகள் விளக்கப்பட்டிருந்தன. அவர்கள் நீண்ட வயதைப் பெறுவார்கள் என்ற செய்தி இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிலைநாட்டிய ஜமாஅத், முஸ்லிஹ் மவ்வூதின் காலக்கட்டத்தில் அசாதாரண வளர்ச்சியைப் பெறும் என்ற முன்னறிவிப்பு இருந்தது.

வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களின் 52 வருட கிலாஃபத் காலக்கட்டத்தில் முன்னறிவிப்பின் எல்லா பகுதிகளும் சொல்லுக்குச் சொல் நிறைவேறியது என்பதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு சாட்சி பகர்கிறது. நீதியை விரும்பும் ஒருவருக்கு ஆன்மீக ரீதியில் பார்க்கும் கண்ணை உடைய ஒருவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கு இந்த முன்னறிவிப்பே ஒரு பெரிய ஆதாரமாகும்.

மூன்று நாட்களுக்குப் பிறகு 20 பிப்ரவரி வரவிருக்கிறது. இன்று நான் இந்த அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வார்த்தைகளிலேயே அன்னாரின் சில முன்னறிவிப்பு -களை எடுத்து வைப்பேன். இது உண்மையான ஆன்மா மூலமாக அவர்கள் சிறப்பிக்கப்பட்டது குறித்தும் அவர்களின் மூலமாகவே இந்த முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பது குறித்தும் ஒளியூட்டுகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு 1914 -ல் அல்லாஹ் கிலாஃபத் பதவியைத் தந்தருளி -னான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் எல்லா அம்சங்களும் நிறைவேறி இருப்பதை மக்களால் காண முடிந்தது. ஜமாஅத்தின் அறிஞர்கள் மற்றும் ஜமாஅத் சகோதரர்களுள் பெரும்பாலார் அன்னார்தான் முஸ்லிஹ் மவ்வூது என்று அறிந்திருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் (ரலி) அவர்கள் தாமே முன் வந்து இதனை அறிவிக்கவில்லை. 1944 வரை அன்னார் அறிவிக்கவில்லை. அதாவது அன்னாரின் கிலாஃபத்தின் 30 வருடங்கள் நிறைவேறியது. அதற்குப் பிறகு அன்னார் ஒரு கனவின் அடிப்படையில் தாமே முஸ்லிஹ் மவ்வூது என்று பிரகடனம் செய்தார்கள்.

மேலும் கூறினார்கள்: ''எனது இயல்பிற்கேற்ப இவ்வாறு பிரகடனம் செய்வதும், எனது கனவை முழுமையான விளக்கத்துடன் எடுத்து வைப்பதும் எனக்கு மிகவும் சங்கடமாகவே உள்ளது.'' இன்னும் சொல்வதாயின், அன்னாரே பல இடங்களில் கூறினார்கள். ''நான் எனது இயல்பிற்கேற்ப இதனை கூறுவதில் ஒரு தயக்கத்தை உணர்கிறேன். ஆனால், சில சூழ்நிலைகளின் காரணமாக சில விஷயங்கள் கூற வேண்டியது வருகின்றன. எவ்வாறிருப்பினும், அன்னாருக்கு முன்னரும் கூட இந்தக் கருத்து கூறப்பட்டது. ஜமாஅத் மக்கள் தரப்பிலிருந்து, தாங்களே முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவிப்பு செய்யுங்கள் என்று கூறப்பட்டது. ஆனால் அன்னார், அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் முஸ்லிஹ் மவ்வூது ஆக இருந்தால் என்னிடம் முன்னறிவிப்புகள் நிறைவேறுகிறது என்றால் சரிதான். பிறகு ஒரு வாதம் செய்வதற்கு என்ன தேவை உள்ளது? என்றுதான் கூறி வந்தார்கள்.

மக்களுக்கு பதிலளித்தவாறு அன்னார் ஒருமுறை கூறினார்கள்: முஸ்லிம் உம்மத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பவர்களின் பட்டியல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் காட்டப்பட்ட பிறகு வெளியிடப் -பட்டது. அவர்களில் எத்தனை பேர் முஜத்தித் என்று வாதம் செய்திருந்தார்கள்?

நானே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். எனக்கு ஔரங்கசீப் கூட தமது காலத்தின் முஜத்தித் ஆகத் தெரிகிறார்கள் என்று கூறுவதை நான் கேட்டுள்ளேன். அவர்கள் ஏதும் வாதம் செய்துள்ளார்களா? உமர் பின் அப்துல் அஸீஸ் முஜத்தித் என்று கூறப்படுகிறார்கள். அவர்கள் ஏதும் வாதம் செய்துள்ளார்களா? எனவே இறைவனால் நேரடியாக நியமிக்கப்படாத ஒருவர் வாதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. முன்னறிவிப்புகளில் இறைவனால் நியமிக்கப்பட்டவர்களுக்கே வாதம் செய்வது அவசியமாகும். இறைவனால் நியமிக்கப் -படாதவரைப் பொறுத்தவரையில் அவரது பணிகளை மட்டும் நோட்டமிட்டால் போதுமானது. அவர்களது பணிகள் நிறைவேறியிருப்பது தெரிந்தால் பிறகு அந்த வாதம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இந்நிலையில் அவர் மறுத்தால் கூட அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றியவர் அவர்தான் என்று நாம் கூறுவோம். உமர் பின் அப்துல் அஸீஸ் தம்மை முஜத்தித் என்று கூறப்படுவதை மறுத்தால் கூட அவர் அவரது காலத்தின் முஜத்தித் என்று நம்மால் கூற முடியும். ஏனெனில், முஜத்தித்திற்கு வாதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இறைவனால் நியமிக்கப்பட்ட முஜத்தித்துகளுக்கு மட்டுமே வாதம் செய்வது அவசியமாகும். ஆயினும், இறைவனால் நியமிக்கப் -படாதவர் தமது காலத்தில் வீழ்ந்து கிடக்கும் இஸ்லாத்தை நிலைநிறுத்தினாலும் அல்லது எதிரிகளின் தாக்குதல்களை முறியடித்தாலும், நமக்கு தெரியாவிட்டாலும் கூட நாம் அவரை முஜத்தித் என்று கூற முடியும். ஆயினும், இறைவனால் நியமிக்கப்பட்ட முஜத்தித் என்பவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் போன்று வாதம் செய்யலாம்.

எனவே, என் தரப்பிலிருந்து நான் முஸ்லிஹ் மவ்வூது என்று வாதம் செய்ய வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. எதிரிகளின் வார்த்தைகளால் பதற்றப்பட வேண்டிய அவசியமும் எமக்கில்லை. இது எந்த வரம்புக்கும் உட்பட்ட விஷயமல்ல. இறைவன் புறமிருந்து எது கிடைக்கிறதோ அதுவே ஆகிறது. உலகின் பார்வையில் மனிதன் இழிவாகக் கருதப்பட்டாலும் சரியே. அவர் இறைவனது வழியில் செல்வாராயின், அவன் முன்னிலையில் அவர் கண்ணியத்திற்குரியவராகவே இருப்பார். ஒரு மனிதர் பொய்யைப் பயன்படுத்தியவாறு தமது வாதத்தை நிரூபித்துக் காட்டிவிட்டாலும், தமது முனைப்பு மற்றும் தந்திரத்தால் மக்களிடம் வெற்றியும் பெற்றுவிட்டால் கூட இறைவன் முன்னிலையில் அவர் அதே கண்ணியத்தைப் பெற முடியாது. எவருக்கு இறைவன் முன்னிலையில் கண்ணியமில்லையோ அவர் வெளிப்படையான முறையில் எவ்வளவுதான் கண்ணியத்திற்குரியவராகவே ஏன் இருக்கக் கூடாது? அவர் சிறிது இழந்துள்ளாரே ஒழிய எதனையும் பெறவில்லை. இறுதியில் ஒருநாள் அவர் சிறுமையே அடைவார். ஆகவே, மார்க்க மற்றும் உலகியல் பணிகளில் எப்போதும் உண்மையையே மேற்கொள்ளுங்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: எவர் இறைவனுக்காக நஷ்டத்தை ஏற்றுக் கொள்வாரோ அவர் உண்மையில் பலன் பெற்றவராகவே இருக்கிறார். இவ்விஷயத்தில்

ஓர் அடிப்படை விஷயத்தை அன்னார் கூறியுள்ளார்கள். எந்த உண்மைக்கு ஆதரவாக இறைவன் இருப்பானோ, எவரை இறைவன் உண்மையாளர் என்று கருதுகிறானோ அவரது உண்மை இறைவனது செயல் சாட்சியத்தின் மூலமும் வெளிப்படுத்தப்படுகிறது. அவர் வாதமோ அறிவிப்போ செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும், அல்லாஹ் அறிவிக்க வேண்டும் என்று விரும்பினால் அறிவிக்கவும் படுகிறது. ஒருவர், இவர் இறைவனது விரும்பத்திற்கு ஏற்பதான் வேலை செய்கிறாரா? அல்லது இறைவன் புறமிருந்துதான் இவர் உள்ளாரா? அதாவது இவரது மார்க்கப் பணிகள் இறைவன் புறமிருந்துதானா? என்று பரிசீலிக்க விரும்பினால், இறைவனது ஆதரவுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே விளக்கியதுபோன்று அல்லாஹ் அன்னாரிடம் அறிவிப்பு செய்யுமாறு கூறினான். அவர்கள் அறிவிப்பும் செய்தார்கள். என்னிடம் இப்போது அவன் தெளிவுபடுத்தியும் விட்டான். முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பை உண்மைப்படுத்துபவன் நானே என்று இப்போது நான் அறிவிக்கிறேன் என்று அன்னார் கூறினார்கள்.

இந்த அறிவிப்பை அன்னார் செய்ததும் ஒருபுறம் ஜமாஅத் சகோதரர்கள் சந்தோஷம் அடைந்தனர். அதே வேளையில் பைஅத் செய்யாதவர்கள் ஆட்சேபனை செய்யத் தொடங்கி விட்டார்கள். இந்த வகையில் **1945 –ன்** ஆண்டு மாநாட்டின் **27 –ம்** தேதி அதாவது மாநாட்டின் இரண்டாம் நாள் உரையில் இதுபற்றி குறிப்பிட்டவாறு அன்னார் குறிப்பாக மவ்லவி முஹம்மது அலி சாஹிப் சம்பந்தமாக இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

நான் முஸ்லிஹ் மவ்வூது ஆக இருப்பதாக அறிவித்ததில் இருந்து மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களும் மவ்லவி ஸனாவுல்லாஹ் சாஹிம் அவர்கள் செய்ததுபோன்றே ஆட்சேபனை செய்யத் தொடங்கி விட்டார். நான் கனவு அல்லது இல்ஹாமை கூறுகிறேன். அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் அறிவிப்பு செய்கிறேன். ஆனால் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அதற்கு எதிரில் எந்தக் கனவையோ இல்ஹாமையோ எடுத்து வைக்கவும் இல்லை. எடுத்து வைக்கவும் முடியாது. ஏனெனில் அவரால் மிகவும் சிரமப்பட்டு **30** வருடங்களுக்கு முந்தைய ஓர் இல்ஹாமையே எடுத்து வைக்க முடிந்தது. அதுவும் நிகழ்வின்படி தவறாகவே வெளியானது. ஆகவே இல்ஹாம் கிடைக்கவே இல்லையென்றால் எவ்வாறு எடுத்து வைக்க முடியும்? இந்நிலையில் ஆட்சேபனையை தவிர அவர்களிடம் வேறு எதுவும் இல்லை. அவர் ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் நம்மை எப்படித்தான் எதிர்கொள்ள முடியும்?

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய எதிரிகள் இல்ஹாம் எதுவும் இறங்காது என்று ஆட்சேபனை செய்ததில்லை. அவர்களுக்கு முன்னர் வந்த நபிமார்களுக்கு இல்ஹாம் வந்திருந்தது. அவர்களும் அதனை ஏற்றிருந்தனர். எனவே அந்த நபிமார்களை மறுப்பவர்கள் இல்ஹாம் என்ற ஒன்று இல்லை என்று ஆட்சேபனை செய்ய முடிந்ததில்லை. தமது கூற்றை நிரூபிப்பதற்காக நபிமார்களை எதிர்ப்பதற்காக இவரது இல்ஹாம் சுயமே புனையப் –பட்டது என்றுதான் அவர்கள் கூறினார்கள். இதே போன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடைய எதிரிகளும் இதைத்தான் அதாவது, இவரது இல்ஹாம் இவரால் சுயமே புனையப்பட்டது என்றுதான் கூறினார்கள்.

கிறித்தவர்கள் மற்றும் யூதர்களின் இந்தக் கூற்று உண்மையென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வஹி நவூதுபில்லாஹ் சுயமே புனையப்பட்டது என்றால், அல்லாஹ்வின் தன்மானத்தின் எதிர்பார்ப்பு எப்படி இருந்திருக்கும் என்றால், அவர்களுக்கு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக அவன் இல்ஹாம் வழங்கி இருப்பான். அதன் மூலம் இட்டுக்கட்டு –பவரின் பொய் வெளிப்பட்டிருக்கும். அனைத்தும் தெளிவாக இருக்கும் வகையில் அல்லாஹ் செய்திருப்பான். அத்தகையோரை அல்லாஹ் தமது இல்ஹாமிலிருந்து விலக்கி வைத்திருந்ததே ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் உண்மையில் இருந்தார்கள் என்றும் அன்னாரின் எதிரிகளாகிய யூதர்களும் கிறித்தவர்களும் உண்மைக்கு மாறானதில் இருந்தார்கள் என்று தெரிவிக்கிறது. இதுபோன்றுதான் இன்று மவ்லவி முஹம்மது அலி சாஹிப் எனது இல்ஹாம் பொய் என்ற கூறுகிறார். ஏனெனில் அல்லாஹ் எனக்கு எதிராக அவருக்கு உண்மையின் இல்ஹாம் எதுவும் வழங்கவில்லை. மவ்லவி சாஹிப் உண்மையில் இருக்கிறார் என்றும் நான் உண்மை அல்லாததில் இருக்கிறேன் என்றும் தெளிவுபடுத்தக்கூடிய இல்ஹாமை அவருக்கு அல்லாஹ் வழங்கவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: பகலும் இரவும் அல்லாஹ்வின் படைப்பினங்களை ஒருவர் வழிதவறச் செய்கிறார்; பகலும் இரவும் தமது சுய தந்திரங்களால் மற்றவர்கள் தவறான வழியில் இட்டுச் செல்கிறார். எனினும் இறைவனுக்கு தன்மானமே ஏற்படவே இல்லையா? அல்லாஹ்வுக்கு தன்மானம் வரவில்லை என்றால் அதற்குக் காரணம் நிச்சயமாக இதனைத் தவிர வேறு எதுவுமில்லை. மவ்லவி சாஹிப், அவனது நெருக்கத்தை விட்டு மிகவும் தூரத்தில் இருக்கிறார் என்று அல்லாஹ் நன்றாக அறிகிறான். எனவே, அல்லாஹ் அவருக்கு எந்த இல்ஹாமும் வழங்கவில்லை.

ஆகவே உண்மைக்கு எதிராக ஆரம்பத்தில் இருந்தே மறுப்பும் இருந்து வந்துள்ளது. எதிரிகளிடம் இருந்து தொடக்கத்திலிருந்தே இது தொடர்ந்து வந்தது; தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். (அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 240-241) ஆட்சேபனை செய்பவர்கள் எப்போதும் ஆட்சேபனை செய்தே வந்துள்ளனர். ஆனால் அதனை மறுப்பதற்காக அதற்கு எதிரில் வேறு எதனையும் அவர்களால் எடுத்து வைக்க இயலாது. அல்லாஹ்வை சாட்சியாக வைத்து எடுத்து வைக்கவும் முடியாது. ஏனெனில் அவ்வாறு செய்தால் நாம் பிடிக்கப்படுவோம் என்று அவர்களுக்கு தெரியும். இப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய சில இல்ஹாம்கள், ஆன்மீகக் காட்சிகள் மற்றும் கனவுகளை குறிப்பிடுகிறேன். இவை முஸ்லிஹ் மவ்வூது என்ற அறிவிப்பை அன்னார் செய்யும்போது எடுத்து வைத்தவையாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எல்லாவற்றிற்கும் முதலில் இந்தப் பதவியின் பக்கம் சுட்டிக் காட்டக் கூடிய என்னுடைய ஓர் இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்நாளிலேயே எனக்கு வந்திருந்தது. நான் அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்று தெரிவித்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனை தமது இல்ஹாம் எழுதும் குறிப்பேட்டில் எழுதிக் கொண்டார்கள். அந்த இல்ஹாமை நான் பலமுறை கூறியுள்ளேன்.

மக்களிடம் கூறுகின்றார்கள்: முதலில் இந்த இல்ஹாம் எனக்கு கிலாஃபத்தைக் குறித்துக் கூறுவதாகக் கருதியிருந்தேன். இப்போது எனது மனம் இப்பக்கம் திரும்பியுள்ளது. இந்த இல்ஹாம் அல்லாஹ்விடமிருந்து எனக்கு கிடைக்கவிருந்த எனது இந்த பதவியைச் சுட்டிக் காட்டுகிறது. அந்த இல்ஹாம் இதுவாகும்:

இன்னல்லஸீ னத்தபவூக ஃபவ்கல்லஸீன கஃபரு இலா யவ்மில் கியாமா – நிச்சயமாக அல்லாஹ் உன்னைப் பின்பற்றியவர்களை உன்னை மறுப்பவர் –களுக்கு எதிராக கியாமத் வரை மேலோங்கச் செய்வான்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதில் ஞானமிக்க சைகை உள்ளது. அது மிக நுட்பமான சைகையாகும். முன்னறிவிப்பு நிறைவேறக்கூடிய வரிசைக்கிரமத்தை அது விளக்குகிறது. அது என்னவென்றால், அந்த இல்ஹாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறங்கியதைப் பற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடப் –பட்டுள்ளது. ஆனால் அங்கு வார்த்தைகள் இவ்வாறு உள்ளன. وَجَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ (வஜாயிலுல்லஸீ னத்தபவூக ஃபவ்கல்லஸீன கஃபரு இலா யம்வில் கியாமா) என்று இல்ஹாம் உள்ளது. இதற்குக் காரணம் என்னவென்றால் மூஸாவின் தொடரின் கடைசி நுபுவ்வத் தம்முடையது என்பது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய வாதமாக இருந்தது. இத்தகைய வாதத்திற்கு அதற்கு முன் இருப்பவர்களின் எதிர்ப்பு கண்டிப்பாக இருக்கும். பிறகு ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு அந்த நபியின் மீது அவர்கள் ஈமான் கொள்கின்றனர். ஆனால், முஸ்லிஹ் மவ்வூது என்ற முன்னறிவிப்பில் ஆட்சேபனைக்கு உள்ளாகுபவரை அல்லாஹ் முதலில் ஒரு கலீஃபாவாக ஆக்கவிருந்தான். அந்த கலீஃபாவுக்கு அவரை ஏற்றுக் கொண்ட ஒரு ஜமாஅத் ஏற்கனவே அவருக்கு கிடைத்து விடுகிறது. எனவே இங்கு 'ஜாயிலுல்லஸீன' என்ற பகுதியின் தேவை இருக்கவில்லை. மஸீஹ் என்ற பதவியை உடையவர் தனது வாதத்தை எடுத்து வைக்கும்போது மக்கள் கேட்டவுடனேயே இவர் பொய்யர் என்று கூறத் தொடங்கி விட்டனர். அபூபக்ர் போன்ற பண்பை உடைய மனிதர் இருந்து அவரை ஏற்றுக் கொண்டார் என்றால் அது வேறு விஷயம். பொதுவாக ஒரு மனிதர் தமது நுபுவ்வத் வாதத்தைப் பற்றி அறிவிப்பு செய்யும்போது முழு உலகமும் அவரை பொய்யர் என்றே கருதுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முதலில் ஆரம்பக் கட்டத்தில் மூன்று பேர்தான் ஈமான் கொண்டனர். ஆனால் கலீஃபாவையோ முதல் நாளிலேயே ஒரு ஜமாஅத் ஏற்றுக் கொள்கிறது.

எனவே இன்னல்லஸீனத்தபவூக ஃபவ்கல்ல –ஸீன கஃபரு இலா யம்வில் கியாமா என்று கூறி அல்லாஹ் ஒரு கருத்தைப் பற்றி சைகை செய்துள்ளான். அல்லாஹ் அவருக்கு ஒருநாள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஒரு ஜமாஅத்தை வழங்குவான். அந்த ஜமாஅத் அவருடன் சேர்த்து உறுதியாகிக் கொண்டே செல்லும். எந்த அளவுக்கு என்றால் உமது ஜமாஅத் ஒருநாள் உமது நிழலாக பிரதிபிம்பமாக ஆகும்படி அழைக்கப்படும். சிலர் உமது எதிரியாகவும் இருப்பர். ஆனால் உம்மிடம் பைஅத் செய்தவருக்கு கியாமத் வரை உம்மை மறுப்பவர் மீது இறைவன் வெற்றியை வழங்குவான். இந்த வெற்றி நீர் இமாம் ஆன முதல் நாளிலிருந்தே ஆரம்பமாகும். வஜாயிலுல்லஸீனத்தபவூக என்ற பகுதியின் தேவை இருக்காது. நீர் எதிர்பார்த்து இரும். மக்கள் எப்போது ஈமான் கொள்வார்கள்? அல்லது பெரும்பாலார் மறுக்கவே செய்கிறார்களே; அல்லது ஃபத்வா கொடுக்கிறார்கள்; எள்ளி நகையாடுகிறார்கள்; மறுக்க முயற்சி செய்கிறார்கள்; அழித்தொழிக்க திட்டமிடுகிறார்கள். உலகில் ஒரு மூலையிலிருந்து மறு மூலை வரை எதிர்ப்புதானே உள்ளது என்ற பதில் இல்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தின் பெரும் பகுதியை அவன் உம்மிடம் ஒப்படைப்பான். (அதாவது முஸ்லிஹ் மவ்வூது இடம்) எந்த நாளில் இந்த ஜமாஅத் உம்மிடம் ஒப்படைக்கப்படுமோ அந்த நாளிலிருந்து உம்மை ஏற்றுக் கொள்பவர்களுக்கு வெற்றி ஆரம்பமாகி விடும். இந்த வகையில் பாருங்கள் அவ்வாறே நடந்தது என்று அன்னார் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடைய ஜமாஅத்திற்கு **300** ஆண்டுகளுக்குப் பிறகுதான் வெற்றி கிடைத்தது. ஆனால் இங்கு இறைவன் எப்போது கிலாஃபத்தின் பதவியில் என்னை நிறுத்தினானோ அதற்கு சில வாரங்களுக்குள்ளேயே எனக்கு எதிராக நின்றவர்களுக்கும், எனது பதவிக்கு எதிராக நின்றவர்களுக்கும் எதிரில் எனக்கும் என்னுடன் இருப்பவர்களுக்கும் அவன் வெற்றியைத்

தரத் தொடங்கினான். வெற்றி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஒரு கனவைச் சார்ந்து நிற்கிறார்கள் என்று பைஅத் செய்யாதவர்கள் இன்று கூறுகிறார்கள். அதாவது ஒரு கனவின் அடிப்படையில் தாம் முஸ்லிஹ் மவ்வூது என்று அன்னார் அறிவித்திருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அதுவும் கனவல்ல. மாறாக, அது வார்த்தையாக இருந்தது. நான் மேலே எழுதியுள்ள அந்த வார்த்தைகள் இல்ஹாம் ஆக வந்தது. 40 வருடங்கள் முன்பு கிடைத்தது. அல்லாஹ் எனக்கு செய்தி தெரிவித்தான். நான் ஒரு ஜமாஅத்தின் இமாம் ஆக இருப்பேன். ஒரு பகுதி என்னை எதிர்க்கும். பெரும்பாலார் என்னுடன் இணைந்திருப்பர். அவர்களுக்கு மற்றவர் மீது கியாமத் வரை அல்லாஹ் வெற்றியை வழங்குவான். அவர்கள் கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருப்பார்கள். உன்னை ஏற்றவர்களை மற்றும் உன்னுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களை மறுப்பவர்களுக்கு எதிரில் அல்லாஹ் கியாமத் வரை மேலோங்கச் செய்வான் என்பதில் ஒரு சைகை உள்ளது. ஒருநாளில் அல்லாஹ் எனக்கு நபிமார்களின் சாயலில் அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் முஹம்மதிய மஸீஹின் பெயரை நிழல் வடிவில் எனக்கு தரவுள்ளான். ஏனெனில், கலீஃபாவின் ஜமாஅத் அவர்களின் வாழ்நாள் வரை இருக்கும். வஃபாத்திற்கு பிறகு நபிமார்களின் ஜமாஅத் அல்லது அவர்களின் நிழல்களின் ஜமாஅத் தொடர்கிறது. இவ்வாறு கஃபரூ என்ற சொல்லிலும் இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கிலாஃபத்திற்குப் பிறகு எனக்கு இன்னொரு பதவி கிடைக்கவுள்ளது. அது நபிமார்களின் நிழல் ஆக இருக்கும். சுப்ஹானல்லாஹி லா யுஸாலு அம்மா யஃபி அலூன். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 87-89)

பிறகு கூறுகின்றார்கள்: இரண்டாவது எனக்கு ஒரே ஆன்மீக காட்சி வந்தது. அதனையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்நாளிலேயே நான் பார்த்தேன். அதுவும் இதே பதவியின் பக்கம் சுட்டிக் காட்டுகிறது. நான் பார்க்கிறேன். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருந்த ஓர் அறையிலிருந்து வெளி வருகிறேன். அந்த தாழ்வாரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இதில் உள்ளவை சில உமக்கும் சில ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் உரியது என்று கூறி ஒருவர் என்னிடம் ஒரு பார்சலைத் தருகிறார். கஷ்ஃபின் நிலையிலேயே அந்த பார்சலில் எழுதியுள்ளதைப் பார்க்கிறேன். அதில் எனக்கு இரண்டு பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. முஹ்யித்தீன் மற்றும் முயினுத்தீனுக்கு கிடைத்துள்ளது என்று எழுதியிருந்ததாகத் தெரிகிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்தக் கஷ்ஃப் பற்றி நான் கருதுகிறேன். இதில் ஒரு பெயர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடையது. இரண்டாவது பெயர் என்னுடையது. நான் சிறு வயது பையனாக இருந்தேன். முஹ்யித்தீன் இப்னு அரபியின் பெயரை நான் கேட்டதில்லை என்பதால் நான் ஔரங்கசீப் உடைய பெயரையே முயினுத்தீன் என்று அறிந்திருந்ததால் அப்போது நான் அவ்வாறு கருதியிருந்தேன். அதாவது முஹ்யித்தீன் என்பதன் பொருள் நான் என்றும், முயினுத்தீன் சிஸ்தி என்ற ஒரு பெரியவர் இந்தியாவில் வாழ்ந்து சென்றுள்ளார்கள். எனவே முயினுத்தீன் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்று நான் கருதினேன். பின்னாளில் எனக்கு தெரிய வந்தது. முஹையித்தீன் இப்னு அரபி என்ற பெரியவர் வாழ்ந்து சென்றுள்ளார்கள். எனவே முஹ்யித்தீன் என்பதன் பொருள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். ஏனெனில் அன்னார் மார்க்கத்தை உயிர்ப்பித்தார்கள். முயினுத்தீன் என்பதன் பொருள் நான் ஆவேன். அதாவது, மார்க்கத்திற்கு உதவி செய்தவன் ஆவேன் என்று எனக்கு தெரிய வந்தது.

மார்க்கத்திற்கு உயிரூட்டியவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மார்க்கத்திற்கு ஆதரவளித்தவன் நான் ஆவேன். தாய் குழந்தையைப் பெற்றெருக்கிறாள். செவிலித்தாய் அதற்குப் பாலூட்டுகிறாள். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 89-90) அதைப்போன்று மூன்றாவது இல்ஹாம் எனக்கு இவ்வாறு வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வஃபாத்திற்குப் பிறகு அந்த இல்ஹாம் வந்தது. (34:14) اِعْمَلُوْٓا اٰلَ دَاوٗدَ شُكْرًا தாவூதின் குடும்பத்தினரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு அவனது கட்டளைகளின்படி செயல் -படுங்கள். இந்த இல்ஹாமில் அல்லாஹ் 'இஃமலூ' என்று கூறியவாறு தனது விருப்பத்தின்படி முழுமையாக செயல்படுமாறு கட்டளையிட்டுள்ளான். மேலும் தாவூதின் குடும்பத்தினரே என்று கூறி என்னை சுலைமான் (அலை) அவர்களுடன் ஒப்பிட்டுள்ளான். ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்கள், ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களுக்குப் பிறகு கலீஃபாவாக ஆனார்கள். மேலும் அவர்களின் மகனாகவும் இருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு நினைவு உள்ளது. அப்போது இந்த இல்ஹாம் எவ்வளவு அழுத்தமாக வந்தது எனில் எவ்வளவு நேரம் வரை அந்த இல்ஹாமின் நிலை எனக்கு புத்துணர்வுடன் இருந்தது எனில், எவ்வளவு தெளிவாக இருந்தது எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்போது வஃபாத் ஆகிவிட்டார்கள். நான் எனது ஒத்த வயதிலுள்ள நண்பர்களோடு நடக்கச் சென்ற போது அதுபற்றி அவர்களிடம் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று அன்னார் வஃபாத் ஆனதே எனது நினைவில் இருந்துபோய் விட்டது. நான் ஓடிப்போய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இதுபற்றி கூற வேண்டும் என்று தோன்றியது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 90)

பிறகு நான்காவது சாட்சியம் இந்த முஸ்லிஹ் மவ்வூது நானே என்ற இந்தக் கனவை உண்மைப் -படுத்தக்கூடிய ஒரு கஷ்ஃப் – ஆன்மீகக் காட்சி ஒன்றை நான் கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைத்துத் துஆவில் அமர்ந்து நான் துஆ செய்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இப்ராஹீம் ஆக இருந்தார்கள். பிறகு எனக்கு வெளிப்படுத்தப் -பட்டது. இந்த உம்மத்தில் இன்னும் பல இப்ராஹீம்கள் இருந்தனர். இந்த வகையில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம், நீங்கள் இப்ராஹீம் ஆவீர்கள் என்று கூறப்பட்டது. அன்னாரின் பெயர் இப்ராஹீம் அத்ஹம் என்று கூறப்பட்டது. இப்ராஹீம் அத்ஹம் அவர்கள் அரசராக இருந்தார்கள். அன்னார் ஆட்சி அதிகாரத்தை கை விட்டு விட்டு சூஃபியிசத்தை மேற்கொண்டார்கள். ஆகவே எனக்கு ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் இப்ராஹீம் அத்ஹம் என்று கூறப்பட்டது. பிறகு நீரும் ஓர் இப்ராஹீம் ஆவீர் என்றும் கூறப்பட்டது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 90)

ஐந்தாவது சாட்சியத்தைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்கு சமீபத்திய காலத்தில் இக்கருத்திற்கு ஐந்தாவது சாட்சியமாகக் கிடைத்த கனவு இதுவாகும். நான் ஒருமுறை கனவில் பார்த்தேன். ஒரு மணியோசைக் கேட்கிறது. அது பித்தளை பாத்திரங்களால் தட்டியதுபோன்று இருந்தது. ஆனால் அந்த ஓசை எந்த அளவுக்கு இன்னிசையாக இருந்தது எனில், காற்றுவெளி முழுவதும் கலந்திருந்தது; மிகச் சிறந்த இசைச் சுருதிகள் அதில் இடம்பெற்றிருந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. இந்த ஓசை அதிகமாகி அதிகமாகி எல்லாம் சேர்ந்து ஒரு சட்டத்திற்குள் வந்து விட்டது.

ஒரு ஃபோட்டோவை பிரேமில் போடுவதுபோன்று ஒரு பிரேமில் அது அடைக்கப்பட்டது. நான் பார்க்கிறேன். அந்த பிரேமில் ஒரு உருவப்படம் தோன்றியது. அது மிகவும் அழகு வாய்ந்த ஓர் இருப்பாக இருந்தது. பிறகு அந்த உருவம் அசைந்தது. சிறிது நேரத்தில் அந்த பிரேமிலிருந்து அது குறித்து என் முன்னே வந்தது. நான் அவரை இறைவனது மலக்கு என்று கருதுகிறேன். அவர் என்னிடம் கூறினார். வாருங்கள். நான் உங்களுக்கு சூரா ஃபாத்திஹாவின் பாடம் நடத்துகிறேன். இந்த வகையில் அவர் எனக்கு சூரா ஃபாத்திஹாவின் பாடம் நடத்தத் தொடங்கினார். தந்தார்; தந்தார் தந்து கொண்டே சென்றார். இய்யாக்க நஃ புது வஇய்யாக்க நஸ்தயீன் வரை வந்ததும் கூறினார். இன்று வரை எத்தனை விரிவுரையாளர்கள் வந்துள்ளனரோ அவர்கள் அனைவரும் மாலிகி யவ்மித்தீன் வரைதான் விரிவுரை தந்துள்ளனர். நாம் உமக்கு அதற்கு மேலும் உள்ள தஃப்ஸீரைக் கூறுகிறேன் என்று கூறினார்.

இந்த வகையில் அவர் எனக்கு சூரா ஃபாத்திஹா -விற்கான முழு தஃப்ஸீரையும் கற்றுத் தந்தார். எனக்கு கண்கள் திறந்ததும் அந்த மலக்கு கூறியவை எனக்கு சிறிது நினைவில் இருந்தாலும் அதனை நான் குறித்து வைக்கவில்லை. பிறகு அதுவும் கூட மறந்து விட்டது. காலையில் அந்த கனவைப் பற்றி முதல் கலீஃபாவிடம் கூறினேன். கனவில் மலக்கு என்னிடம் கூறினார். அவற்றில் சில கண் திறந்த பிறகும் எனது நினைவில் இருந்தது. காலையில் எழுந்ததும் என் மனதிலிருந்து அவை அகன்று விட்டது என்றும் கூறினேன். ஹஸ்ரத் முதல்


## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772

V.A. SAIT - 99430 30230

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

கலீஃபத்துல் மஸீஹ் கோபத்துடன் கூறினார்கள். அத்தனை அறிவையும் வீணாக்கி விட்டீர்கள். அதனை குறித்து வைத்திருக்க வேண்டியதாக இருந்ததே? என்றார்கள். ஆனால் அந்த நாள் போய் விட்டது. இந்த நாள் வந்தது. எனக்கு சூரா ஃபாத்திஹாவிலிருந்து தான் அல்லாஹ் புதிய புதிய கருத்துக்களை புரிய வைத்துக் கொண்டிருக்கிறான். இந்த வகையில் இப்போதும் கூட இந்த கனவிற்குப் பிறகு நான் கவனம் செலுத்தியபோது ஜமாஅத் அமைப்பின் சீர்திருத்தத்திற்கும் இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிப்பதற்கும் எத்தனை தெளிவான திட்டம் வேண்டுமோ அதனை அவன் சூரா ஃபாத்திஹாவிலிருந்தே மிகவும் தெளிவான முழுமையான திட்டங்களாக கூறினான். அதன்படி செல்வதன் மூலமே இஸ்லாம், எதிரிகள் வியக்கும் அளவிற்கு முன்னேற்றத்தைப் பெற முடியும். இஸ்லாமிய பண்பாட்டை ஒப்புக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்காது. இந்த திட்டத்திற்கேற்ப ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இஸ்லாமிய அமைப்பிலும் பண்பாடு தொடர்பான கட்டளைகளைப் புரிந்து கொள்வதிலும் முஸ்லிம்கள் செய்த தவறுகளை அல்லாஹ்வின் அருளால் சரி செய்து விடலாம்.

இவை அனைத்தையும் இறைவன் சூரா ஃபாத்திஹா மூலமாகவே எனக்குப் புரிய வைத்தான். இந்த கனவின் அசல் பொருள் என்னவாக இருந்தது எனில் எனது உட்புற ஆற்றல்களில் சூரா ஃபாத்திஹா பற்றிய அறிவு சிறப்பாகவும், திருக்குர்ஆனை புரிந்து கொள்ளும் திறன் பொதுவாகவும் வைக்கப்பட்டுள்ளது. அது அந்தந்த வேளையில் உட்புற இல்ஹாமின் மூலம் தேவையைப் பொறுத்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 90-92)

பிறகு அன்னார் இதனையும் கூறியுள்ளார்கள்: இப்போது ஜமாஅத்தில் சோதனை ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் என்னிடம் இல்ஹாமாக தெரிவித்தான். லமுமஸ்ஸிக்கன்னஹூம் நான் அவர்களை துண்டு துண்டாக்கி விடுவோம். ஜமாஅத்தை விட்டு விட்டுச் சென்றவர்கள் அப்போது தம்மை 95 சதவீதம் பேர் என்று கூறி வந்தனர். ஆனால் இப்போது அவர்களின் நிலை என்ன? அல்லாஹ் இந்த முன்னறிவிப்பிற்கேற்ப உண்மையலேயே அவர்களை துண்டு துண்டாக்கி விட்டான். இந்த வகையில் காஜா கமாலுத்தீன் சாஹிப் தமது வஃபாத்திற்கு முன்பு மிர்ஸா மஹ்மூது நம்மைப் பற்றி வெளியிட்ட இல்ஹாம் முற்றிலும் நிறைவேறி விட்டது. நாம் உண்மையிலேயே துண்டு துண்டாக்கி விட்டோம் என்று எழுதினார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: சுருக்கம் என்னவெனில், அல்லாஹ் என்னிடம் பலமுறை தனது மறைவான செய்திகளை வெளிப்படுத்தி இந்த முன்னறிவிப்பை உண்மையாக்கி விட்டான். முஸ்லிஹ் மவ்ஊது இறைவனின் உண்மையான ஆன்மாவைக் கொண்டு (ரூஹே ஹக்) சிறப்பிக்கப்படுவார். இது அல்லாஹ்வின் அடையாளமாகும். அதனை அவன் என் மூலமாக வெளிப்படுத்தியுள்ளான். இதனை அன்னார் கூறுகிறார்கள். இது மிக நீண்ட விரிவுரையாகும்.

எவ்வாறிருப்பினும், வரக்கூடிய நாள்களில் ஜமாஅத்தின் இந்த முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு கூட்டங்கள் நடக்கும். பிப்ரவரி 20 ஆம் தேதி வருகிறது. ஜமாஅத் சகோதரர்கள் அதிகமாக அக்கூட்டங்களுக்கு வர வேண்டும். M.T.A –விலும் இது தொடர்பான நிகழ்ச்சிகள் வந்து கொண்டிருக் –கின்றன. அதை அவர்கள் கேட்க வேண்டும். அதன் மூலம் இந்த முன்னறிவிப்பு குறித்த ஆழமான அறிவு அவர்களுக்கு கிடைக்கும். இந்த முன்னறிவிப்பில் எண்ணற்ற அடையாளங்கள் உள்ளன. இன்னும் சில பண்புகள் தொடர்பாக அன்னார் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். விளக்கங்கள் வெளியிடப் –பட்டுள்ளன. மிகவும் மகிமையுடன் அந்த அனைத்து அடையாளங்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களிடம் நிறைவேறி விட்டன.

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*எடுக்காமல் இருக்க வேண்டுமா? அல்லது எங்களது அரசு இவ்விஷயத்தில் என்ன செய்ய வேண்டும்?*

*இந்த கேள்விக்கு ஹுஸூர் அய்யத -ஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: அமைதியை நிலைநாட்டு -வதற்கான சரியான வழிமுறை என்ன என்பதை அரசாங்கம் பார்க்க வேண்டும். அதன் காரணமாக நிலைமைகள் மேலும் மோசமானதாக ஆகி விடக் கூடாது. அவ்வாறே உள்ளூர்வாசிகளுக்கு துன்பங்கள் உருவாகி விடக் கூடாது. அவ்வாறே அவர்களது உரிமைகள் பாதிப்பிற்கு ஆளாகக் கூடாது. அசல் விஷயம் என்னவென்றால் நீதி மற்றும் நேர்மையின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். எல்லா பிரிவினருக்கும் அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.*

✪ *அடுத்து நிரூபர் அவர்கள் இவ்வாறு கேள்வி கேட்டார்கள். உங்களது ஜமாஅத்தைப் பற்றி தெரியாத இங்கு வந்துள்ள கனடாவாசிகளுக்கு மத்தியக் கிழக்கு நாடுகளிலுள்ள உங்கள் ஜமாஅத்தைச்சார்ந்தவர்கள் ஏன் கொடுமைகளுக்கு இலக்காகுகின்றனர் என்பதைப் பற்றி கூறுவீர்களா?*

*இந்த கேள்விக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: மத்தியக் கிழக்கு நாடுகளில் மட்டும் அல்ல. மாறாக எல்லா முஸ்லிம் நாடுகளிலும் எங்களுக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. இதைக் கேட்ட நிரூபர் இங்கு கனடாவிலும் எதிர்ப்பு இருக்கின்றதா? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:*

*முஸ்லிம் நாடுகளில் எங்களுக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. அதற்கு காரணம் என்ன -வென்றால் இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப் -பிற்கேற்ப இறுதி காலத்தில் சீர்திருத்தவாதியாக எந்த நபர் வர வேண்டியது இருந்ததோ அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற பட்டங்களுடன் வந்து விட்டார். அவர்களது பெயர் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) ஆகும் என்பது எங்களது கொள்கையாகும். மற்ற முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனாக இருக்கிறார்கள். எனவே, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிறகு வேறு எந்த நபியும் வர முடியாது என்று கூறுகின்றனர். காத்தமுன்னபிய்யீன் என்பதற்கான விளக்கத்தில் மட்டுமே வித்தியாசம் காணப்படு -கின்றது. இப்போது எந்தவொரு புதிய ஷரீஅத்தும் வர முடியாது. புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருகின்ற நபியும் வர முடியாது என்பது எங்கள் கொள்கையாகும். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள ஷரீஅத்தை பின்பற்றியவாறு அவர்கள் வழங்கிய போதனைகளுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் சமுதாயத்திலிருந்து நபி வர முடியும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் தொடர்பான எங்களது நம்பிக்கை இதுவாகும். அதாவது இந்த நபர் தொடர்பாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 வருடங்களுக்கு முன்னர் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கான நேரம் இதுவேயாகும். எனவே, இதன் காரணமாகத் -தான் மற்ற முஸ்லிம் பிரிவுகள் எங்களுக்கு எதிராக செயல்படுகின்றனர். ஆனால் இந்த எல்லா எதிர்ப்புகளும் இருந்தும் கூட அசல் விஷயத்தைப் புரிந்து கொள்கின்ற சில மக்களும் கூட இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றிய அறிவு இருக்கின்றது. எங்களது ஆதாரங்களை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இமாம் மஹ்தி மற்றும் மஸீஹின் வருகை தொடர்பாக கூறியுள்ள எல்லா அடையாளங்களும் நிறைவேறியிருப்பதைக் கண்டு இம்மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் இந்த முஸ்லிம்களிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து வருகின்றனர்.*

✪ *தொடர்ந்து நிருபர் அவர்கள் இவ்வாறு கேள்வி கேட்டார்: உங்களது கருத்தின்படி உங்களது ஜமாஅத்திற்கும் கிறிஸ்தவ மத நூலைப் போதிப் -பவர்களுக்கு இடையிலும் ஒப்புமை இருக்கின்றதா? அவர்களைப் போன்று உங்களது ஜமாஅத்திலும் பிரச்சாரகர்கள் இருக்கின்றனர். உங்களது ஜமாஅத்தைச் சார்ந்த மக்களும் பைஅத்தை பெறுவதற்கு முயற்சி செய்கின்றனர். இந்த கேள்விக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:*

*அவர்களுக்கும் பிரச்சார நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், வித்தியாசம் என்ன -வென்றால் நான் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேலர்களுக்காவே அனுப்பட்டுள்ளேன் என்றே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறினார்கள். அதற்கேற்ப கிறித்தவம் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குட்பட்ட மதமாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் முழு உலகிற்காகவும் வந்துள்ளார்கள் என்று பைபிளும் வாதம் செய்ய -வில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவன் முழு உலகிற்கும் ரஹ்மத்துல் லில் ஆலமீனாக அதாவது எல்லா உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பி -யுள்ளான் என்பது திருக்குர்ஆனின் வாதமாகும். எனவே, கிறித்தவர்கள் முழு உலகிலும் இதே தப்லீகின் பணியைத்தான் செய்து வருகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை இதன் காரணமாகவே அவர்களுக்கு ஓரளவு வெற்றியும் கிடைத்திருக்கலாம். ஆனால் இந்த பணி அவர்களது போதனைகளின் ஒளியில் அல்லது பைபிளின் போதனைகளுக்கேற்ப அவர்கள் மீது கடமை அல்ல. ஆனால் எங்களது போதனைகள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியில் இந்த பணி எங்களது கடமைகளில் ஒன்றாக இருக்கின்றது.*

✪ *நிருபர் இவ்வாறு கேள்வி கேட்டார்: நாங்கள் மேற்கில் வாழ்கின்றோம். இஸ்லாமிய உலகைப்*

பற்றி அறியாதவர்களாக இருக்கின்றோம். பெருகி வருகின்ற தீவிரவாதத்தை நாங்கள் எவ்வாறு புரிந்து கொள்ளமுடியும்? சில முஸ்லிம் பிரிவுகளிடம் இருந்து வெளிப்படுகின்ற இந்த தீவிரவாதத்தை நாங்கள் எவ்வாறு எதிர்த்து நிற்க முடியும்?

இதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பதில் கூறினார்கள்:

முஸ்லிம்களிலுள்ள சில பிரிவுகள் என்று நீங்கள் கூறி மிகவும் பொருத்தமான சொற்களை பயன்படுத்தியுள்ளீர்கள். எனது கருத்தின்படி அல்லது நான் புரிந்ததற்கு ஏற்ப தீவிரவாதத்திற்கு பல காரணங்கள் உள்ளன. அவை அனைத்தையும் நாம் கண் முன்னிருத்த வேண்டும். இதற்கான ஒரு காரணத்தை 2008 -ல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு நம்மால் பார்க்க முடிகின்றது. அதாவது உலகம் முழுவதும் அமைதியின்மை உருவாகியது. எல்லாவிதமான அமைதியின்மையும் அரபு உலகிலிருந்தே ஆரம்பமானது. அது *Arab Spring* என்று கூறப்பட்டது. இதற்கு பிறகு முஸ்லிம் நாடுகளில் மக்களுக்கு சுதந்திரம் வழங்கப்படுகின்றது என்ற பெயரில் பல பிரிவுகள் தோன்றின. உங்களது அரசாங்கமும் தலைவர்களும் உங்களுக்குரிய உரிமைகளைப் பறிக்கின்றனர். அவை நீதியுடன் உங்களுக்கு வழங்கப்படவில்லை என்று அந்த பிரிவுகள் முழக்கங்களை எழுப்பின. எனவே, பொருளாதார வீழ்ச்சி மற்றும் தலைவர்கள் அநீதியுடன் நடந்து கொண்டது ஆகியவற்றுடன் வேறு பல காரணங்களும் இருந்தன. அவற்றின் காரணமாக தீவிரவாத பிரிவுகள் தங்களது சுய பயன்களுக்காக முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாதிகளாக ஆக்கி விட்டனர். எந்த மக்களுக்கு தங்களது சுய பயன்களைப் பெற வேண்டியதிருந்ததோ அவர்கள் இளைஞர்களை தீவிரவாதிகளாக மாற்றி விட்டனர்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: எனக்கு கனடாவைப் பற்றி தெரியவில்லை. ஆனால், 2008-ற்கு பிறகு யூ.கே.-வில் ஏறக்குறைய 3 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருந்தனர். சில வருடங்களுக்குப் பிறகு அங்கு நிலைமை ஓரளவு சரியானது. எந்த மக்கள் தங்களுக்கு தெரிந்த தொழிலில் அனுபவமுள்ளவர்களாக இருந்தார்களோ அவர்களுக்கு வேலை கிடைத்தது. ஆனால் இப்போதும் கூட 1.7 அல்லது 1.8 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். இதில் எல்லாரையும் விட அதிகமான இழப்பு இளைஞர்களுக்குத்தான் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த விஷயம் கூட அவர்களை தீவிரவாதத்தின் பக்கம் கொண்டு செல்வதற்கான ஒரு காரணமாக இருக்க முடியும். இந்த இளைஞர்கள் தீவிரவாதிகளாக ஆக்கப்படுகின்றனர். இவர்கள் *ISIS* அல்லது இதுபோன்ற மற்ற பிரிவுகளில் சேர்கின்றனர். அவர்களுக்கு பெருந்தொகை அதாவது மாதந்தோறும் 6 அல்லது 7 ஆயிரம் டாலர்கள் அல்லது இதைவிட கொஞ்சம் குறைவான தொகை சம்பளமாக தரப்படுகின்றது. ஆனால், இது அவர்கள் தமது நாடுகளில் சம்பாதிக்க முடிந்த தொகையை விட அதிகமாகும். இதன் காரணமாகவே கூட இந்த இளைஞர்கள் இந்த பிரிவுகளில் சேர்ந்து விடுகின்றனர்.

✪ பத்திரிகை நிருபரான இவர் ஹுஸூர் அவர்களிடம் வேலையில்லாதவர்களுக்கு கிடைத்து வரும் பொருளாதார பலன்களை தவிர ஜிஹாது என்று அழைக்கப்படுகின்ற அத்தகைய ஒரு போதனையும் இஸ்லாத்தில் இருக்கின்றது என்று கூட வாதம் செய்கின்ற சில மக்களும் உள்ளனர். இதன் காரணமாக தீவிரவாதத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் அதிகமாகின்றதா? என்று கேள்வி கேட்டார். இந்தக் கேள்விக்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

இந்த அனைத்து விவகாரமும் 2008 -ல் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவிற்குப் பிறகே ஆரம்பமானது. இதற்கு பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்றே இஸ்லாமிய நாடுகளின் சில அரசாங்கங்கள் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை. இந்த அநீதியின் காரணமாக உங்களது உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று கூறி சில மக்கள் தூண்டிவிடப்பட்டனர். எந்த மக்கள் முதலிலேயே ஆதங்கத்திலும் ஆத்திரமடைந்தும் இருந்தனரோ அவர்களை தீவிரவாதிகளாக ஆக்குவதற்காக சில பிரிவுகள் முயற்சி செய்தன. இந்த பணியை அவர்கள் அவர்களது சொந்த நாட்டில் மட்டும் செய்யவில்லை. மாறாக மேற்கத்திய நாடுகளிலும் ஐரோப்பாவிலும் கூட அதனை அவர்கள் செயல்படுத்தினர். இப்போதுள்ள நிலைமை என்னவென்றால் அவர்களது கோபம் மற்றும் ஆத்திரம், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அமைதியின்மை மற்றும் அவநம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக அவர்கள் ஜிஹாது செய்ய விரும்புகின்றனர். இந்த எல்லா விஷயங்களுக்கும் எழுத்துவடிவிலான சாட்சி இருக்கின்றது. ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஒரு பத்திரிகை நிருபர் இவ்வாறு கூறுகின்றார். நான் சில தீவிரவாதிகளிடம் அல்லது *ISIS* -ற்காக சண்டை போட்டுக் கொண்டிருப்பவர்களிடம் அல்லது அதற்கு ஆதரவாகப் பணியாற்றுபவர்களிடம் நீங்கள் மக்களுடன் நடந்து கொள்ளும் விதம் அல்லது மக்களுடன் நீங்கள் அநீதியுடன் நடந்து கொள்வது திருக்குர்ஆனின் போதனைக்கு எதிரானதாகும். நீங்கள் இவ்வாறு காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொள்ளும்படி குர்ஆனில் எங்கு எழுதப்பட்டுள்ளது? என்று கேட்டேன். அதற்கு அவர்களில் பெரும்பாலார் திருக்குர்ஆனில் இதுபற்றி எங்கு எழுதப்பட்டுள்ளது? அல்லது ஷரீஅத் இது தொடர்பாக என்ன கூறுகின்றது? என்பது பற்றி எங்களுக்கு தெரியாது. மக்களின் தலைகளை வெட்டுங்கள் அல்லது இதுபோன்ற ஏனைய மிருகத்தனமான செயலைச் செய்யுங்கள் என்று எங்களது உயர் அதிகாரிகள் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளனர் என்பது மட்டுமே எங்களுக்கு தெரியும் என்றே பதில் கூறுகின்றனர்.

பிறகு ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த அந்த பத்திரிகை நிருபர் அவர்களில் பெரும்பாலார் இஸ்லாத்தின் போதனையைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மிகவும் ஆத்திரப்படக்கூடிய மக்களாக இருக்கின்றனர். இவ்வாறு அதிகாரிகளும் ஏனைய பிரிவுகளும் அல்லது கிளர்ச்சி செய்கின்ற பிரிவுகளும் ஆகிய இவர்கள் அனைவரும் தத்தமது நோக்கங்களை அடைவதில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களது சுய பயனைத் தேடுவதில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறியுள்ளார். இவ்வாறும் கூறப்படுகின்றது. அதாவது தற்கொலை தாக்குதல் நடத்துவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. அவ்வாறு இருக்க நீங்கள் ஏன் அவ்வாறு செயல்படுகின்றீர்கள் என்று அவர்களில் சிலரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் நீங்கள் கூறுவது சரிதான். இது என்ன என்பது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. ஆனால், இவ்வாறு செய்யும்படி எங்களது மேலதிகாரிகளிடமிருந்து கட்டளை தரப்பட்டுள்ளது என்று அவர்கள் பதில் கூறுகின்றனர். பிறகு அவர்களில் சில மக்கள் இவ்வாறும் இருக்கின்றனர். அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றி மிகக் குறைவான அறிவே இருக்கின்றது. அவர்கள் நீங்கள் கூறுவது சரிதான். இது அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல என்பது எங்களுக்கு தெரியும். ஆனால், எவராவது இதற்கேற்ப செயல்பட்டால் நாங்கள் அவர்களை தடுக்க மாட்டோம். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் இந்த செயலைச் செய்யமாட்டோம் என்று அவர்கள் கூறினர்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: இந்த விஷயம் தொடர்பாக அவர்கள் குழப்பத்தில் உள்ளனர் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்ள முடியும். ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பதை தெளிவாக அவர்களால் கூற முடியவில்லை. இவ்வாறு முழு விவகாரமுமே சிக்கலான நிலைமையில் இருக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மேற்கத்திய நாடுகளும் இந்த விவகாரத்தை மேலும் தூண்டி விடுகின்றன. ஏனென்றால் ஆயுதங்களையும் தடவாளங்களையும் வாங்குவதற்கு அது அவர்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கியிருக்கின்றது.

✪ பத்திரிகை நிருபர் மேற்கத்திய நாடுகள் ஆயுதங்களை வாங்குவதற்கு உதவி செய்கினறது என்று நீங்கள் கூறுகின்றீர்களா? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

பல பெரிய அரசாங்கங்களும் அவ்வாறு செய்கின்றன. பல அரசாங்கங்களும் கிளர்ச்சி செய்கின்ற பிரிவினர்க்கு உதவி செய்து கொண்டிருக்கின்றன. *ISIS* இதுவரை எவ்வாறு நிலைத்து நிற்கின்றது? என்பதை பற்றி சுயமே நீங்களே சிந்தித்துப் பார்க்க முடியும். தன்னிடம் உள்ள பெட்ரோலை விற்று அவர்கள் கோடிக்கணக்கான டாலர்களைச் சம்பாதிக்கின்றனர். எதுவரையென்றால் அவர்களது வங்கியின் மூலமாக *Transactions* (பரிவர்த்தனைகள்) நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நாடுகள் சொந்தக் காலில் உறுதியாக நிலைத்து நிற்கின்ற ரஷ்யா மற்றும் ஈரான் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. அவர்களது பொருளாதார நிலைமைகள் கூட பாதித்திருக்கின்றது. அவ்வாறிக்க பிறகு பெரிய அரசாகங்கள் இந்த பிரிவுகள் மீது கட்டுப்பாடுகளை விதித்து இந்த பிரச்சனையை ஏன் தீர்த்து வைக்காமல் இருக்கின்றனர்?

✪ பத்திரிகை நிருபர் தொடர்ந்து நீங்கள் மிகவும் பிஸியாக இருக்கின்ற மனிதர் என்பதை

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# ஜுமுஆ பேருரை

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். எல்லா இடங்களிலும் குழப்பம் நிலவுகின்றது. நான் ஏற்கனவே பல முறை கூறியிருப்பது போன்று இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் முஸ்லிம்களே இதற்கு பொறுப்பாளிகளாக இருக்கின்றனர் என்று கூறுகின்றன. இதுவும் சரிதான். சில முஸ்லிம் பிரிவுகளும் அமைப்புகளும் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்கள் இல்லாத நாடுகளிலும் எத்தகைய செயல்களை செய்து கொண்டிருக்கின்றனர் என்றால் அவை அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை தவிர வேறு எதுவுமில்லை. இஸ்லாத்தின் போதனைகளுக்கு இதனுடன் சிறிதளவு கூட தொடர்பில்லை. ஆனால் ஒரு திட்டத்தின் கீழ் முஸ்லிம்களிடையே இந்த நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதும் உண்மையாகும். பொதுவாக இஸ்லாத்திற்கு சுயநலமுள்ள முஸ்லிம்களும் நயவஞ்சகர்களும் தான் இழப்பை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்கள் தங்களது சுய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இத்தகைய சக்திகளின் கருவிகளாக இருந்து வந்துள்ளனர். எந்நிலையிலும் உலகின் பொதுவான நிலை மோசமாக இருக்கின்றது. சில முஸ்லிம்களின் தவறான செயல்களின் காரணமாக இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளுக்கு இஸ்லாத்தைப் பற்றிய அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு அதிகமாக சந்தர்ப்பம் கிடைத்து வருகின்றது. இதன் காரணமாக அஹ்மதி முஸ்லிம்களாகிய நாமும் இந்த அநீதிக்கு இலக்காகின்றோம்.

அஹ்மதிகள் முஸ்லிம்களாக இருக்கின்ற நிலையிலும் இன்னும் சொல்வதென்றால், முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகளாக இருக்கின்ற நிலையிலும் அவர்கள் கடுமையான நிலைமையை சந்தித்து வருகின்றனர். இறைவனின் வாக்குறுதிக்கேற்ப வந்திருக்கின்ற ஒரு அழைப்பாளரை நாங்கள் ஏற்றுக் கொண்டதுதான் இதற்கு காரணமாக இருக்கின்றது. பாகிஸ்தானில் அநீதியான சட்டத்தின் காரணமாக மவ்லவிகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. மவ்லவிகளுக்கு பயப்படுவதன் காரணமாக நீதிமன்றங்களும் கூட வேறு வழியின்றி நீதியுடன் தீர்ப்பு வழங்க முடியாத நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றது. ஆனால் இப்போது அல் ஜஸாயிரிலும் கூட நீதிமன்றங்கள் இதே நடைமுறையை கடைபிடித்து செயல்பட்டு வருகின்றன. பெயர்தாங்கி ஆலிம்கள் மீதுள்ள பயத்தால் அப்பாவி அஹ்மதிகளின் மீது தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களை சிறைச்சாலைக்கு அனுப்பி வருகின்றனர்.

நம்மிடம் உலக அரசாங்கமும் இல்லை. அவ்வாறே உலக செல்வமும் நம்மிடம் இல்லை. பெட்ரோலின் பணமும் நம்மிடம் இல்லை. எனினும் நம்மிடம் ஒரு விஷயம் இருக்கின்றது. அதன் பக்கம் உலகிலுள்ள அஹ்மதிகள் அனைவரும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அது இறை வணக்கங்கள், ஸதகாக்கள் மற்றும் இஸ்திஃபாரின் மூலமாக இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதாகும். இந்த விஷயங்கள்தான் அல்லாஹ்வின் கருணையை பொங்கி எழுச் செய்யும். இதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வந்து விடுகின்றான்.

---

மனிதனின் எண்ணற்ற பலவீனங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் நாம் உலகப் பணிகளில் ஈடுபடுவதன் காரணமாக நமது இறை வணக்கங்களுக்கான உரிமையை நாம் செலுத்துவதில்லை. ஏதாவது சொந்த கஷ்டம் வந்து விட்டால் சிறிதளவு ஸதகா கொடுப்பதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. அது அல்லாமல் அதன் பக்கம் கவனம் ஏற்படுவதில்லை. இஸ்திஃபார் செய்வதன் பக்கம் நாம் செலுத்த வேண்டிய உரிமையை நாம் செலுத்தாமல் இருக்கின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் நம்மைப் பற்றி ஆய்வு செய்து பார்த்தால் இந்த விஷயம் தெளிவாக புலப்பட்டு விடும். அதாவது நம்மில் பெரும்பாலார் இவற்றிற்குரிய உரிமையை செலுத்துவதில்லை. எனவே அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டுமென்றால் மேலும் அவனது கருணையைப் பொங்கி எழச் செய்ய வேண்டுமென்றால், அவ்வாறே எதிரிகள் மற்றும் பகைவர்களின் முயற்சியை தோல்வியடையச் செய்ய வேண்டுமென்றால் இந்த விஷயங்களின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவை அல்லாஹ்வின் திருப்தியையும் அவனது மன்னிப்பையும் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கின்றன.

திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள் ஆகியவற்றின் ஒளியில் இறைவணக்கங்களை நிலைநாட்டுவது, அதிகமாக தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்வது, ஸதகாக்கள் கொடுப்பது ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் குறிப்பாக வலியுறுத்திக் கூறினார்கள்.

சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மரீ பர்தாவி சாஹிபுடைய மனைவியான மதிப்பிற்குரிய சுஅதா பர்தாவி சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**24 பிப்ரவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **24 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۔

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். எல்லா இடங்களிலும் குழப்பம் நிலவுகின்றது. நான் ஏற்கனவே பல முறை கூறியிருப்பது போன்று இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் முஸ்லிம்களே இதற்கு பொறுப்பாளிகளாக இருக்கின்றனர் என்று கூறுகின்றன. இதுவும் சரிதான். சில முஸ்லிம் பிரிவுகளும் அமைப்புகளும் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்கள் இல்லாத நாடுகளிலும் எத்தகைய செயல்களை செய்து கொண்டிருக்கின்றனர் என்றால் அவை அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை தவிர வேறு எதுவுமில்லை. இஸ்லாத்தின் போதனை–களுக்கு இதனுடன் சிறிதளவு கூட தொடர்பில்லை. ஆனால் ஒரு திட்டத்தின் கீழ் முஸ்லிம்களிடையே இந்த நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதும் உண்மை ஆகும். பொதுவாக இஸ்லாத்திற்கு சுயநலமுள்ள முஸ்லிம்களும் நயவஞ்சகர்களும்தான் இழப்பை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்கள் தங்களது சுய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இத்தகைய சக்திகளின் கருவிகளாக இருந்து வந்துள்ளனர்.

எந்நிலையிலும் உலகின் பொதுவான நிலை மோசமாக இருக்கின்றது. சில முஸ்லிம்களின் தவறான செயல்களின் காரணமாக இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளுக்கு இஸ்லாத்தைப் பற்றிய அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு அதிகமாக சந்தர்ப்பம் கிடைத்து வருகின்றது. இதன் காரணமாக அஹ்மதி முஸ்லிம்–களாகிய நாமும் இந்த அநீதிக்கு இலக்காகின்றோம். அஹ்மதிய்யத்தின் போதனையும், செயலும் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை தவிர வேறு எதுவுமில்லை என்பதை நம்மைப் பற்றி நன்கு தெரிந்தவர்களுக்கு தெரியும் என்றாலும் பொதுமக்கள் அவர்களைப் போன்றே நம்மையும் கருதுகின்றனர். ஊடகங்கள் எவ்வாறு இஸ்லாம் தொடர்பாகவும், முஸ்லிம்கள் தொடர்பாகவும் தவறான விஷயங்களை பரப்பி இருக்கின்றதோ அவ்வாறே அவர்கள் நம்மை கருதுகின்றனர். சில நாடுகளிலுள்ள சமுதாயத்தை சார்ந்து நிற்கின்ற அமைப்புகளும், கட்சிகளும் எந்தவொரு விஷயத்தையும் கேட்பதற்கே விரும்புவ–தில்லை. எதிர் நடவடிக்கை மற்றும் எதிர்மறையான சிந்தனையே அவர்களிடம் இருக்கின்றது. அதற்கு ஏற்பவே அவர்கள் செயல்படுகின்றனர். ஜெர்மனியின் கிழக்குப் பகுதியும் இந்த எதிர்ப்பை எதிர்கொண்டு இருக்கின்றது. அவ்வாறே விரைவில் தேர்தல் நடைபெற இருக்கின்ற ஹாலாந்திலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் Rightist –ன் தாக்கம் அதிகமாக இருந்து வருகின்றது. அமெரிக்காவின் நிலையும் நம் கண் முன்னால் இருக்கின்றது.

அஹ்மதிகள் முஸ்லிம்களாக இருக்கின்ற நிலையிலும் இன்னும் சொல்வதென்றால், முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகளாக இருக்கின்ற நிலையிலும் அவர்கள் கடுமையான நிலைமையை சந்தித்து வருகின்றனர். இறைவனின் வாக்குறுதிக்கேற்ப வந்திருக்கின்ற ஒரு அழைப்பாளரை நாங்கள் ஏற்றுக் கொண்டதுதான் இதற்கு காரணமாக இருக்கின்றது. பாகிஸ்தானில் அநீதியான சட்டத்தின் காரணமாக மவ்லவிகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்–பட்டிருக்கின்றது. மவ்லவிகளுக்கு பயப்படுவதன் காரணமாக நீதிமன்றங்களும் கூட வேறு வழியின்றி நீதியுடன் தீர்ப்பு வழங்க முடியாத நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றது. ஆனால் இப்போது அல் ஜஸாயிரிலும் கூட நீதிமன்றங்கள் இதே நடைமுறையை கடைபிடித்து செயல்பட்டு வருகின்றன. பெயர்தாங்கி

ஆலிம்கள் மீதுள்ள பயத்தால் அப்பாவி அஹ்மதிகளின் மீது தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களை சிறைச்சாலைக்கு அனுப்பி வருகின்றனர். இப்போது அங்கு அஹ்மதிய்யத்தின் காரணமாக குறைந்த பட்சம் 16 அஹ்மதிகள் சிறைச்சாலை தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் ஓர் அஹ்மதி என்ன செய்ய வேண்டும்? நம்மிடம் உலக அரசாங்கமும் இல்லை. அவ்வாறே உலக செல்வமும் நம்மிடம் இல்லை. பெட்ரோலின் பணமும் நம்மிடம் இல்லை. எனினும் நம்மிடம் ஒரு விஷயம் இருக்கின்றது. அதன் பக்கம் உலகிலுள்ள அஹ்மதிகள் அனைவரும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அது இறை வணக்கங்கள், ஸதகாக்கள் மற்றும் இஸ்திஃபாரின் மூலமாக இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதாகும்.

இந்த விஷயங்கள்தான் அல்லாஹ்வின் கருணையை பொங்கி எழுச் செய்யும். இதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வந்து விடுகின்றான். இறை வணக்கத்தின் பக்கம் அதிலும் குறிப்பாக தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கடந்த குத்பாக்களில் நான் கவனமூட்டி இருந்தேன். இன்று ஸதகாக்கள் மற்றும் இஸ்திஃபார் தொடர்பாக அதிகமாக சில விஷயங்களை கூறுவேன். இவை இறைவனின் கருணையை பெறுவதற்கான வழியாக இருக்கின்றது.

மனிதனின் எண்ணற்ற பலவீனங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் நாம் உலகப் பணிகளில் ஈடுபடுவதன் காரணமாக நமது இறை வணக்கங்களுக்கான உரிமையை நாம் செலுத்துவதில்லை. ஏதாவது சொந்த கஷ்டம் வந்து விட்டால் சிறிதளவு ஸதகா கொடுப்பதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. அது அல்லாமல் அதன் பக்கம் கவனம் ஏற்படுவதில்லை. இஸ்திஃபார் செய்வதன் பக்கம் நாம் செலுத்த வேண்டிய உரிமையை நாம் செலுத்தாமல் இருக்கின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் நம்மைப் பற்றி ஆய்வு செய்து பார்த்தால் இந்த விஷயம் தெளிவாக புலப்பட்டு விடும். அதாவது நம்மில் பெரும்பாலார் இவற்றிற்குரிய உரிமையை செலுத்துவதில்லை. எனவே அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டுமென்றால் மேலும் அவனது கருணையைப் பொங்கி எழச் செய்ய வேண்டுமென்றால், அவ்வாறே எதிரிகள் மற்றும் பகைவர்களின் முயற்சியை தோல்வியடையச் செய்ய வேண்டுமென்றால் இந்த விஷயங்களின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவை அல்லாஹ்வின் திருப்தியையும் அவனது மன்னிப்பையும் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கின்றன.

நான் தவ்பா, இஸ்திஃபார் மற்றும் ஸதகாக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று இறைவன் கூறுவது நீங்கள் தவ்பா மற்றும் இஸ்தஃபார் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே ஆகும். அதன் மூலமாக நான் உங்களது துன்பங்களை அகற்றுவேன். உங்களது அமைதியற்ற நிலையை அகற்றுவேன். உங்களை எனக்கு அருகில் கொண்டு வந்து விடுவேன். உங்களது கடந்த கால பாவங்களை மன்னிப்பேன். நீங்கள் உண்மையான இறையடியாராக ஆவதற்கான நல்வாய்ப்பை வழங்குவேன். உங்கள் மீது கருணை காட்டுவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். இதனையே திருக்குர்ஆனின் இந்த வசனத்திலும் அல்லாஹ் கூறுகின்றான்:

اَلَمْ يَعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ هُوَ يَقْبَلُ التَّوْبَةَ عَنْ عِبَادِهٖ
وَيَاْخُذُ الصَّدَقٰتِ وَاَنَّ اللّٰهَ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ﴿١٠٤﴾

அதாவது என்ன இவர்களுக்குத் தெரியாதா? அல்லாஹ்தான் தனது அடியார்களின் தவ்பாவை ஏற்றுக் கொள்கின்றான். ஸதகாக்களை ஏற்றுக் கொள்கின்றான். அல்லாஹ்தான் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான். (9:104)

ஸதகா மற்றும் துஆவின் முக்கியத்துவம் மற்றும் அவற்றிற்கிடையிலுள்ள தொடர்பு பற்றி ஒரு சந்தர்ப்பத்–தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''ஸதகா என்பது 'ஸித்க்' என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். ஒரு நபர் அல்லாஹ்வின் வழியில் ஸதகா கொடுக்கும் போது அதன் மூலம் இறைவனிடத்தில் அவர் 'ஸித்க்' அதாவது உண்மையான தொடர்பை வைத்திருக்–கின்றார் என்பது தெரிய வருகின்றது. இரண்டாவது துஆ ஆகும்.''

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''துஆவின் மூலமாக உள்ளத்தில் உருக்கமும் வேதனையும் ஏற்படுகின்றது. துஆ செய்வதில் ஒரு தியாகம் இருக்கின்றது. உண்மை, துஆ ஆகிய இரு விஷயங்களும் ஒருவருக்கு கிடைத்து விட்டால் அதுவே விஷ முறிவாக இருக்கின்றது. அதாவது இந்த இரண்டு விஷயங்களும் ஒருவருக்கு கிடைத்து விட்டால் அது ஓர் வெற்றிகரமான சிகிச்சையாக இருக்கும்''. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 87-88 அடிக்குறிப்பு 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இஸ்திஃபார் அதாவது பாவமன்னிப்பு கோருதலும் கூட துஆவே ஆகும். மனிதன் தனது பாவங்களிலிருந்து தனது பலகீனங்களை கண்முன் நிறுத்தியவாறு அவற்றிலிருந்து விலக துஆ செய்யும் போது அதில் ஒரு உருக்கமும், வேதனையும் ஏற்படுகின்றது. அவ்வாறு ஏற்படவும் வேண்டும். உள்ளத்தில் ஒரு வேதனை உருவாக வேண்டும். வெறும் நாவால் அஸ்தக்ஃபிருல்லாஹ், அஸ்தக்–ஃபிருல்லாஹ் என்று கூறி விட்டு அவரது கவனம் அல்லாஹ்வின் பக்கம் இருப்பதற்குப் பகரமாக வேறு எங்காவது இருந்தால் அவர் அடைய வேண்டிய நோக்கம் நிறைவேறாமல் போய் விடும்.

எனவே, அல்லாஹ் துஆக்களைக் கேட்கின்றான். நிம்மதியற்ற நிலைமையில் அல்லாஹ்வின் கருணையை பெறுவதற்காக கொடுக்கப்படுகின்ற ஸதகாக்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான். நான் எனது பலவீனங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முழுமை–யாக முயற்சி செய்வேன் என்று அடியான் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது, மேலும் அடியான் அல்லாஹ்வின் கருணையை ஈர்க்க முயற்சி செய்யும் போது பிறகு அதற்கு எதிரில் அல்லாஹ்வும் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இவ்வாறு நற்செய்தி வழங்கி இருக்கின்றான். அதில் அவன் துஆக்களையும், ஸதகாக்களையும் ஏற்றுக் கொள்வதை பற்றி மேலும் விளக்கிக் கூறியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான். எனது அடியானுக்கு தெரிவித்து விடுங்கள். எனது அடியான் என் பக்கம் ஒரு அடி நடந்து வந்தால் நான் அவன் பக்கம் இரண்டு அடி நடந்து வருகின்றேன். எனது அடியான் விரைவாக நடந்து என் பக்கம் வந்தால் நான் அவன் பக்கம் ஓடி வருகின்றேன். எனவே அல்லாஹ்வின் கருணைக்கு எந்தவொரு எல்லையும் இல்லை.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் மிகவும் வெட்கம் உள்ளவன். மிகவும் தாராளமாக வழங்குபவன். மிகவும் கருணை உள்ளவன். அடியான் அவனிடம் தனது கைகளை உயர்த்தும் போது அதை அவன் காலியாகவும், தோல்வியடையச் செய்தும் திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகின்றான்.

(சுனன் திர்மிதி அப்வாபுத் த.்வாத் ஹதீஸ் 3556)

எனினும், இவ்வாறு நடைபெறலாம். அதாவது அடியான் எவ்வாறு விளைவை எதிர்பார்க்கின்றானோ அல்லது எத்தகைய விளைவு வெளிப்பட வேண்டும் என்று ஆசைப்படுகின்றானோ அவ்வாறே அந்த விளைவு அந்த சமயத்திலேயே வெளிப்பட வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை. சில நேரங்களில் அல்லாஹ் தனது ஏதாவதொரு ஞானத்தின் அடிப்படையில் சில காலம் கழிந்த பிறகு வேறு ஏதாவதொரு வடிவத்தில் அந்த துஆக்கள் மற்றும் ஸதகாக்களின் விளைவை வெளிப்படுத்துவான். சில நேரங்களில் அடியான் கேட்பது போன்றே உடனடியாக அதன் விளைவும் வெளிப்பட்டு விடுகின்றது. எனவே, இறைவன் நான் துஆக்களை கேட்கின்றேன். நான் இஸ்திஃபாரை ஏற்றுக் கொள்கின்றேன். நான் ஸதகாக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று இறைவன் கூறியிருப்பதில் நமக்கு முழுமையான ஈமான் இருக்க வேண்டும். அதாவது மனிதன் தமது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பை கேட்கும் போது வருங்காலத்தில் பாவங்களிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும் தவிர்ந்திருப்பேன் என்று உறுதி மொழி எடுக்கும்போது மேலும் அதற்காக முழுமையாக முயற்சி செய்யும் போது அதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான். எல்லாவிதமான கவலைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் அவரை வெளியேற்றுகின்றான்.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் நமது உள்ளத்தின் நிலைமையை அறிந்தவனாக இருக்கின்றான். எனவே பிறருக்கு காட்டுவதற்கான நாம் செய்யும் செயல்கள் அவனால் ஏற்றுக் கொள்ளப்படாது. ஆனால் கலப்பற்ற தன்மையுடன் அந்த செயல்களை செய்தால் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்றே அல்லாஹ் அதற்குரிய விளைவை வெளிப்படுத்தாமல் அவற்றை விட்டுவிட மாட்டான். அல்லாஹ் எந்த அளவு கருணை காட்டக்கூடியவனாக இருக்கின்றான் என்றால் தனது அடியார்கள் மீது அவன் கருணை காட்டுவதன் நிலை எவ்வாறு இருக்கின்றது என்றால் எவர்களுக்கு ஸதகா கொடுப்பதற்கு கூட வசதி இல்லாமல் இருக்கின்றதோ அவர்கள் நல்ல விஷயங்களுக்கேற்ப செயல்பட்டு தீய விஷயங்களிலிருந்து விலகி இருப்பதே அவர்களுக்கு ஸதகாவிற்கான நற்கூலியை பெற்றுத் தரும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸக்காத்து பாபு அலா குல்லி முஸ்லிமின் ஸதக்கதுன்............. ஹதீஸ் 1445)

அவர்களது இறைவணக்கங்களும், இஸ்திஃபாரும், மற்றவர்களுக்காக பயன்தரக்கூடிய நற்செயலும் எங்கு இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அங்கு அந்த நல்ல செயல்கள் ஸதகா கொடுப்பதற்கான நற்கூலியையும் அவர்களுக்கு பெற்றுத் தருகின்றது. ஒரு வசதி படைத்த நபர் ஸதகா கொடுத்து எவ்வாறு நற்கூலியை சம்பாதிக்கின்றாரோ அவ்வாறே ஒரு ஏழை நபரும் தனது நல்ல எண்ணத்தின் காரணமாக ஏனைய எல்லா கட்டளைகளையும் முழுமையாக நிறைவேற்றும் பட்சத்தில் ஸதகா கொடுத்ததற்கு சமமான நற்கூலியை சம்பாதித்து விடுகின்றார். எனவே இவ்வாறு அன்பு செலுத்தக்கூடிய இறைவனுக்கு நாம் எவ்வாறெல்லாம் நன்றி செலுத்த வேண்டும். அவன் நமது பலகீனங்களிலிருந்து நாம் தவிர்ந்திருப்ப–தற்கான வழிமுறையை மட்டும் நமக்கு கற்றுத் தரவில்லை. மாறாக, உங்களது பாவங்களில் இருந்தும், பலவீனங்களிலிருந்தும் தவிர்ந்திருப்பதற்காக நீங்கள் செய்யக்கூடிய அந்த செயல்களைக் கூட நான் ஏற்றுக் கொண்டவாறு உங்களுக்கு துன்பங்களிலிருந்தும், துயரங்களில் இருந்தும் நான் இரட்சிப்பை வழங்குவேன் என்று அந்த இறைவன் கூறுகின்றான்.

எனவே, துன்ப நிலைமைகளிலிருந்து வெளியேறுவதற்குரிய ஒரே வழி நாம் நமது இறைவணக்கங்களையும், துஆக்களையும் கலப்பற்றதாக ஆக்கியவாறு அல்லாஹ்வின் முன் குனிவதாகும். எனவே நீங்கள் அல்லாஹ்வின் முன்பு குனியுங்கள். இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் அழுத்தம் காட்டுங்கள். ஸதகா மற்றும் தான தர்மங்கள் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதனை ஜமாஅத் அளவிலும் செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையிலும் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஸதகா மற்றும் இஸ்திஃபார் பற்றிய ஆழமான கருத்தை விளக்கியவாறு பல சந்தர்ப்பங்களில் அவர்கள் வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை நான் இப்போது எடுத்துக் கூறுகின்றேன். இஸ்திஃபாரின் உண்மை நிலையை பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பாவம் எத்தகைய ஒரு கிருமி என்றால் அது மனிதனின் ரத்தத்தில் கலந்து இருக்கின்றது. ஆனால் அதற்கான சிகிச்சை இஸ்திக்ஃபாரின் மூலமாகவே நடக்க முடியும். இஸ்திஃபார் என்றால் என்ன? நாம் செய்துள்ள பாவங்களின் தீய தாக்கங்களிலிருந்து இறைவன் நம்மை பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதே இஸ்திஃபார் ஆகும். ஆனால் எந்த பாவங்கள் இதுவரை நிகழவில்லையோ அதே வேளையில் மனிதனின் ஆற்றலில் அவை இருக்கின்றதோ அந்த ஆற்றல்கள் அவனை பாவத்தின் பக்கம் கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறும் இருக்கின்றதோ அவை நிகழ்வதற்கான அந்த சமயமே வராமல் இருக்க வேண்டும். அதாவது அந்த பாவம் நம்மிடமிருந்து நிகழாமல் இருக்க வேண்டும். இதுவே இஸ்திஃபார் ஆகும். அதாவது அந்த பாவங்கள் உள்ளுக்குள்ளேயே எரிந்து கரிந்து சாம்பலாகி விட வேண்டும். அதாவது கடந்த கால பாவங்களுக்காக மன்னிப்பும் கிடைக்க வேண்டும். அவ்வாறே வருங்காலத்தில் செய்யவிருக்கும் பாவங்களிலிருந்தும் தவிரிந்திருக்க வேண்டும். இதுவே இஸ்திக்ஃபார் ஆகும். அதன் மூலம் அல்லாஹ்வின் கருணை பொங்கி எழ வேண்டும். அவன் அதன் மூலமாக நமக்கு அவனது கருணையையும், அருளையும் வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள் : இந்த நேரம் மிகவும் அச்சத்திற்குரிய நேரமாகும். எனவே, தவ்பா செய்வதிலும், இஸ்திஃபார் செய்வதிலும் ஈடுபடுங்கள். உங்களை நீங்களே ஆய்வு செய்து வாருங்கள். ஒவ்வொரு மதத்தையும், சமுதாயத்தையும் சார்ந்தவர்களும், வேதம் கிடைக்கப் பெற்றவர்களும் ஸதகாக்கள் கொடுப்பதன் மூலமாகவும், தான தர்மங்கள் செய்வதன் மூலமாகவும் தண்டனை அகன்று விடுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் தண்டனை இறங்குவதற்கு முன்னரே நாம் இவற்றை வழங்கி இருக்க வேண்டும். ஆனால் தண்டனை இறங்கி விட்டால் பிறகு ஒரு போதும் அது விலகாது. எனவே நீங்கள் இப்போதிருந்தே இஸ்திஃபார் செய்யுங்கள். தொடர்ந்து தவ்பா செய்து வாருங்கள். அதன் மூலம் உங்களுக்குரிய முறை வந்து விடக்கூடாது. மேலும் அல்லாஹ் உங்களை பாதுகாக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 299; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இப்போது சிறு சிறு கஷ்டங்களை நாம் சகித்து வருகின்றோம். இந்த சிறு சிறு துன்பங்கள் நம் முன்னால் இருக்கின்றன. ஆனால் எந்த பக்கம் உலகம் சென்று கொண்டிருக்கின்றதோ மேலும் எந்த அளவு மனிதன் கடிவாளம் இல்லாமல் சென்று கொண்டிருக்கின்றானோ எவ்வாறெல்லாம் இறைவனின் வெறுப்பைப் பெறுவதற்கான வழிவகைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றதோ அதைப் பார்க்கும்போது மனிதன் தனது கைகளால் ஏற்படுத்திக் கொண்ட அந்த அழிவின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றான் என்பது தெரிய வருகின்றது. இந்த உலகம் அல்லாஹ்வின் கோபத்தை தூண்டுகிறது. இத்தகைய தருணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பவர்களின் பணியாக இது இருக்கின்றது. அதாவது எங்கு நம்மை நாமே தீய தாக்கங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் தவ்பா மற்றும் இஸ்திஃபாரின் பக்கம் அழுத்தம் காட்டுகின்றோமோ அங்கு பொதுவாக உலகிற்காகவும் நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகிலுள்ளவர்களுக்கும் அறிவை வழங்குவானாக.

பிறகு இஸ்திஃபாரின் உண்மை நிலையை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் இரண்டு பெயர்களை எடுத்துக் கூறியிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதில் ஒன்று, 'அல் ஹய்' என்பதாகும். மற்றொன்று, அல் கய்யூம் என்பதாகும். 'அல் ஹய்' என்பதன் பொருள் சுயமே உயிருடன் இருந்து மற்றவர்களுக்கு வாழ்வை வழங்கக் கூடியவன். 'அல் கய்யூம்' என்பதன் பொருள் சுயமே நிலைத்து நிற்பவன். மற்றும் மற்றவர்கள் நிலைத்திருப்பதற்கான அசல் காரணமாக திகழ்பவன். ஒவ்வொரு பொருளின் வெளிப்படையான மற்றும் உட்புறமான நிலைநிற்றல் மற்றும் வாழ்வு இந்த இரண்டு பண்புகள் மூலமாகவே நிகழ்கின்றது. எனவே, 'ஹய்' என்ற சொல் அவனை வணங்க வேண்டும் என்பதை விரும்புகிறது. இதன் வெளிப்பாடே சூரா ஃபாத்திஹாவில் இய்யாக்க நஃபுது என்பதில் இருக்கிறது. 'அல் கய்யூம்' என்ற பண்பு அவனிடமே ஆதரவை கேட்க வேண்டும் என்பதை விரும்புகிறது. இது 'இய்யாக்க நஸ்தயீன்' என்ற வார்த்தைகள் மூலம் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: 'ஹய்' என்ற சொல் இறை வணக்கத்தை வேண்டுவதற்கான காரணம் உயிரோடு இருக்கின்ற அந்த இறைவன் தான் நம்மைப் படைத்திருக்கின்றான். நம்மைப் படைத்து விட்டு அவன் வெறுமனவே நம்மை விட்டுவிடவில்லை. உதாரணமாக, கட்டடத்தை கட்டிய ஒரு கட்டடத் தொழிலாளி மரணித்து விட்டால் அதனால் கட்டடத்திற்கு எந்த சேதமும் ஏற்படாது. ஆனால் மனிதனுக்கோ இறைவனின் தேவை எல்லா நிலைமையிலும் இருக்கின்றது. எனவே இறைவனிடம் இருந்து அவன் ஆற்றலை வேண்டிக் கொண்டே இருப்பது அவசியமானதாகும். இதுவே இஸ்திஃபார் ஆகும். அல்லாஹ்விடமிருந்து பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான ஆற்றலை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

அவனை வணங்குவதற்கான சக்தியை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு ஆற்றலை வேண்டுவது தான் இஸ்திஃபார் ஆகும் என்று அன்னார் கூறுகின்றார்கள். இஸ்திஃபாரின் உண்மை நிலை இதுவாகும். பிறகு இதனை இன்னும் விரிவுபடுத்தி பாவம் செய்பவர்களுக்காகவும் இது செய்யப்படுகின்றது. அந்த பாவங்களின் தீய விளைவுகளிலிருந்து அவர்களை பாதுகாப்பாக வைப்பதற்காக இது செய்யப்படுகின்றது. ஆனால் அசல் விஷயம் என்னவென்றால், மனித பலவீனங்களிலிருந்து மனிதனை காப்பாற்ற வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் : எந்த நபர் மனிதனாக இருந்து இஸ்திஃபாரின் தேவையை புரிந்து கொள்வதில்லையோ அவர் அவமரியாதையாக நடந்து கொள்கின்ற நாத்திகர் ஆவார். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 217; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவது, தவ்பா மற்றும் இஸ்திஃபாரின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

மனிதன் மிகப்பெரிய பணியை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளான். இந்த பணி பற்றிய விளக்கத்தை அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள். அதாவது முதலில் மனிதன் தன்னிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது மனிதன் செய்ய வேண்டிய மிகப்பெரிய பணியாகும். அதாவது தனது நிலைமையில் அவன் தூய மாற்றத்தை உருவாக்க வேண்டும். மேலும் இறைவனிடம் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். அவனை வெறுப்படைய செய்யக்கூடாது. அவன் எந்த நோக்கத்திற்காக உலகில் வந்துள்ளான் என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது எந்த நோக்கத்திற்காக மனிதன் இந்த உலகத்திற்கு வந்துள்ளான் என்பது கூட அவனுக்கு தெரிந்திருக்க வேண்டும். அல்லாஹ் கூறியிருப்பது போன்று அவன் உலகிற்கு வந்ததன் நோக்கம் இறைவனை வணங்கி அவனது நெருக்கத்தைப் பெறுவதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள் : மனிதன் மிகப்பெரிய பணிக்காக உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளான். ஆனால் அதற்கான நேரம் வரும் போது அவன் அந்த பணியை நிறைவேற்றாமல் இருந்தால் பிறகு இறைவன் அந்த மனிதனை அழித்து விடுகின்றான். ஒரு தொண்டனைப் பாருங்கள். அவன் சரியாக பணி செய்யவில்லை என்றால் அவனது எஜமானன் அவனை அகற்றி விடுகின்றான். அவ்வாறிருக்க தனது கடமையை நிறைவேற்றாத அந்த மனிதனை இறைவன் ஏன் நிலைநிற்கும்படி செய்ய வேண்டும்.

அன்னார் உதாரணம் கூறியவாறு கூறுகின்றார்கள்: நம்முடைய மிர்ஸா ஸாஹிப் (அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தையார்) மர்ஹூம் வ மக்ஃபூர் ஐம்பது ஆண்டுகளாக சிகிச்சை பெற்று வந்தார்கள். அவர்களுக்கு எந்தவொரு சரியான மருந்தும் கிடைக்கவில்லை என்பது அவர்களின் கூற்றாகும். உண்மை என்னவென்றால், அல்லாஹ்வின் கட்டளையில்லாமல் மனிதனுக்குள்ளே செல்கின்ற ஒவ்வொரு அணுவும் ஒரு போதும் பயனளிக்கக் கூடியதாக இருக்க முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தவ்பா மற்றும் இஸ்திஃபார் அதிகமாக செய்ய வேண்டும். அதன் மூலம் இறைவன் தனது அருளை வழங்க வேண்டும். இறைவனின் அருள் வரும்போது துஆவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இறைவனும் இதையே கூறி இருக்கின்றான். நான் துஆக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்றும் கூறியுள்ளான். சில நேரங்களில் எனது நியதியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே இறை கட்டளை வராத வரையில் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நான் குறைவாகவே எதிர்பார்க்கின்றேன். மனிதன் மிகவும் பலகீனமானவனும், சக்தி அற்றவனும் ஆவான். எனவே இறைவனின் அருள் மீதே அவனது பார்வை இருக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 319 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் அருளின் மீது பார்வையை வைப்பதற்கு எப்போதும் இறைவன் மீது பார்வையை வைத்திருப்பது அவசியமானதாகும். அவனுடன் ஒன்றி இருப்பது அவசியமானதாகும். தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்து கொண்டிருப்பது அவசியமானதாகும். அல்லாஹ்விற்குரிய உரிமையை –யும் அவனது அடியார்களுக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

அழுது மன்றாடுவதும், ஸதகா கொடுப்பதும், குற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தண்டனையில் இருந்து ஒருவரை தப்ப வைக்க முடியும் என்பதைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வெற்றிக்கான மிகப்பெரிய தூணாக துஆ இருக்கின்றது. ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் சமுதாயம் அழுது மன்றாடியதன் மூலமாகவும் துஆவின் மூலமாகவும் வரவிருந்த தண்டனையில் இருந்து தப்பி விட்டது. எனது அறிவிற்கேற்ப ஒருவர் மற்றவரிடம் தமது கோபத்தை வெளிப்படுத்துவதற்கும் வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் முகாஸிபத் என்று கூறப்படுகின்றது. ஹூத் மீனிற்கு கூறப்படுகின்றது. நூன் வேகத்தை காட்டுவதற்கும் கூறப்படுகின்றது. மீனிற்கும் கூறப்படுகின்றது. எனவே ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் நிலை ஒரு கோபத்தின் நிலையாகும். தண்டனை விலகி சென்று விட்டதனால் அவருக்கு இறைவனிடம் முறையீடு செய்ய வேண்டும் அல்லது புகார் கூற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதாவது முன்னறிவிப்பும் துஆவும் வெறுமனே வீணாகி விட்டது என்ற முறையீடு இருந்தது. நான் கூறிய விஷயம் ஏன் நிறைவேறவில்லை? என்ற எண்ணமும் அவர்களுக்கு வந்தது. இதுவே முகாஸிபத் என்று கூறப்படுகின்ற அந்த கோபத்தின் நிலையாகும். இதிலிருந்தும் ஒரு படிப்பினை கிடைக்கின்றது. அதாவது விதியை அல்லாஹ் மாற்றி விடுகின்றான். அழுது மன்றாடுவதும், ஸதகா கொடுப்பதும் குற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தண்டனையை கூட ரத்து செய்து விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தான தர்மங்களை வழங்குகின்ற வழிமுறை இதன் மூலமே ஏற்பட்டது. இந்த வழிமுறை அல்லாஹ்வை திருப்திப் –படுத்துகின்றது. கனவுகளுக்கான விளக்கத்தில் செல்வம் கல்லீரலாக இருக்கின்றது என்று கூறப் –பட்டுள்ளது. எனவே தான தர்மங்களை வழங்குவது உயிரை கொடுப்பதற்கு ஒப்பானதாக இருக்கின்றது. மனிதன் தான தர்மங்களை வழங்கும் போது எந்த அளவு உண்மையையும், உறுதியையும் வெளிப்படுத்துகின்றான்? அசல் விஷயம் என்னவென்றால் வெறுமனே நாவால் கூறுவதால் மட்டும் எதுவும் நடக்காது. எதுவரை செயல் மூலம் ஒரு விஷயத்தை நாம் காட்டுவதில்லையோ அதுவரை எதுவும் நடக்காது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதனை ஸதகா என்று நாம் ஏன் கூறுகின்றோம் என்றால் அது உண்மையாளர்களின் மீது ஓர் அடையாளத்தை பதித்து விடுகின்றது. துர்ரே மன்சூரில் ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் நிலைமைகளைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது எவராவது உனக்கு முன்னால் வந்து விட்டால் அவர்கள் மீது உனக்கு கருணை வந்து விடும் என்பது முதலிலேயே எனக்குத் தெரியும் என்று யூனுஸ் (அலை) அவர்கள் கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 237-238; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு சபையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதன் விவரம் அல் பத்ர் பத்திரிகையில் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. சிலர் வெளியூரிலிருந்து வந்தனர். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பள்ளிவாசலிலேயே அமர்ந்திருந்தார்கள். பத்திரிகை –யாளர்கள் எழுதுகின்றனர். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அருகிலுள்ள பகுதியிலுள்ள மக்கள் பைஅத் செய்தனர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகை மற்றும் நோன்பைப் பேணுதல் மற்றும் ஒவ்வொரு அநீதியில் இருந்தும் தவிர்ந்திருத்தல் என்ற விஷயம் தொடர்பாக சுருக்கமான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதில் உங்களது வீடுகளில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் நன்மை செய்யுமாறு போதனை செய்யுங்கள் என்று கூறினார்கள். மரங்களுக்கும், வயல்களுக்கும் முழுமையான முறையில் நீர் பாய்ச்சாமல் இருந்தால் அவை கனிகளைத் தராது. அது போன்றே நன்மையின் தண்ணீரை உள்ளத்தில் பாய்ச்சாமல் இருந்தால் அதுவும் மனிதனுக்கு எந்த பலனையும் தராது. எனவே நன்மைகள் பற்றிய விஷயங்களை வீட்டில் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்று அன்னார் கூறினார்கள். அதன் மூலம் துஆக்களின் பக்கமும் இஸ்திஃபாரின் பக்கமும் கவனம் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும். நல்ல செயல்களின் பக்கமும் கவனம் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த தண்ணீரின் மூலமாகவே நன்மையின் செடி வளர்கின்றது. ஈமான் வலுவடைகின்றது. மேலும் பரிகாசம் செய்கின்ற மற்றும் எள்ளி நகையாடுகின்ற சபைகளிலிருந்து விலகி இருக்கும்படி அன்னார் வலியுறுத்திக் கூறினார்கள் என்று எழுதுபவர்கள் எழுதுகின்றனர். பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் நபிமார்கள் செய்த வஸிய்யத்தையும் நினைவூட்டினார்கள். அதாவது ஸதகா மற்றும் துஆவின் மூலமாக துன்பங்கள் அகன்று விடுகின்றன என்பதே அந்த வஸிய்யத் ஆகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களிடம் பைசா இல்லை என்றால் கிணற்றிலிருந்து ஒரு வாளி தண்ணீர் எடுத்து யாருக்காவது வழங்குங்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தனது செல்வத்தாலும் உடலாலும் எவருக்காவது தொண்டு செய்தால் அதுவும் ஸதகா ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 81-82; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற் –காக எங்கு இறை வணக்கங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியமாக இருக்கின்றதோ அங்கு எல்லா விதமான அநீதிகளிலிருந்தும், கொடுமை –களிலிருந்தும் தவிர்ந்திருப்பதும் அவசியமானதாகும். மக்களுக்கு பயனளிக்கக்கூடிய செயல்களை செய்வதும் அவசியமானதாகும். வீட்டில் அதிகமான நேரத்தை உலக விஷயங்களை பேசுவதில் கழிப்பதற்கு பகரமாக நன்மையான விஷயங்களை பேசுவதன் பக்கம் கவனமூட்ட வேண்டியது அவசியமாகும். எந்த சபைகளில் எள்ளி நகையாடுதல் மற்றும் பரிகாசம் செய்தல் ஆகியவை மட்டுமே இருக்குமோ, பிறரை கேலி கிண்டல் செய்வது இருக்குமோ அந்த சபைகளில் இருந்து தவிர்ந்திருப்பது அவசியமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பது போன்று இந்த நல்ல விஷயங்களே ஸதகாவாகும். மக்களுக்கு பயன் தரக்கூடிய செயல்களை செய்வதும் ஸதகாவாகும். எவர்கள் மக்களது துன்பங்களை அகற்றுகின்றனரோ அவர்களும் கூட ஸதகா கொடுப்பவர்கள் போன்றவர்களே ஆவர். எனவே நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: எல்லா மதங்களுக்கிடையிலும் இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்து இருக்கின்றது. அதாவது ஸதகா மற்றும் தான தர்மங்கள் வழங்கும் போது துன்பம் அகன்று விடுகின்றது. துன்பம் வருவது தொடர்பாக அல்லாஹ் முதலிலேயே தெரிவித்து விட்டால் அது எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்பாகும். எனவே ஸதகா மற்றும் தான தர்மங்களை வழங்குவதன் மூலமாகவும் தவ்பா செய்வதன் மூலமாகவும் இறைவன் பக்கம் திரும்புவதன் மூலமாகவும் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளும் கூட விலகிவிட முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு இலட்சத்தி இருபத்தி நாலாயிரம் நபிமார்கள் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது ஸதகா கொடுப்பதன் மூலம் துன்பம் அகன்று விடுகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 227; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) துன்பம் விலகவே முடியாத ஒரு விஷயமாக இருந்தால் பிறகு ஸதகா மற்றும் தான தர்மங்கள் வழங்குவது பயனற்றதாக ஆகிவிடும். எனவே அல்லாஹ் நான் ஸதகாக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறும் போது பிறகு இத்தகைய ஒரு சூழ்நிலையிலும் கூட இறைவன் ஸதகாக்களை ஏற்றுக் கொள்வதற்கான ஆற்றலை உடையவனாக இருக்கின்றான். ஸதகாவை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றான். இதைப்பற்றி அவன் தனது நபிமார்கள் மூலமாகவும் தன்னால் அனுப்பப்பட்ட தூதர்கள் மூலமாகவும் தெரிவிக்கவும் செய்கின்றான். அதாவது எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளும் கூட நிறைவேறாமல் இருக்கும். அவ்வாறு நடக்கும் என்று தெரிவிக்கின்றான். இவ்வாறே யூனுஸ் (அலை) அவர்களின் சமுதாயம் தொடர்பாகவும் நடந்தது. அதாவது அந்த சமுதயாம் அழுது மன்றாடி துஆ செய்ததன் விளைவாக தண்டனையிலிருந்து தப்பியது. அதன் காரணமாக அந்த சமுதாயத்தின் அழிவு பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறாமல் விலகி விட்டது. எனவே, நபிமார்கள் செய்திருக்கின்ற முன்னறிவிப்புகள் கூட ஸதகா மற்றும் தான தர்மங்களை வழங்குவதன் மூலமாக விலகி விடும் போது பிறகு மனிதன் தனது செயல்களின் காரணமாக எந்த விளைவு அவன் முன்னால் வருகின்றதோ மேலும் இறைவனை மறந்ததன் காரணமாக எந்த விளைவு அவன் முன்னால் வருகின்றதோ அவை அந்த மனிதன் இறைவன் பக்கம் திரும்புவதன் காரணமாகவும் தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்வதன் காரணமாகவும் ஸதகா கொடுப்பதன் காரணமாகவும் ஏன் விலகக் கூடாது? நிச்சயமாக அவை விலக முடியும். நிபந்தனை என்னவென்றால் நாம் அழுது மன்றாடுவதும் துஆ செய்வதும் ஸதகா வழங்குவதும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: ஸதகா கொடுப்பது இறைவனின் கோபத்தை குளிர வைத்து விடுகின்றது. தீய மரணத்தை அகற்றி விடுகின்றது. (சுனன் திர்மிதி கிதாபுஸ் ஸகாத் பாபு மா ஜாஅ ஃபி ஃபஸ்லுஸ் ஸதகதி ஹதீஸ் 664)

பிறகு கூறினார்கள்: பாதி பேரீத்தம்பழத்தை ஸதகாவாக கொடுத்தாவது நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸகாத் இத்தகுன்னாரி வலவ் பிஸிக்கி தம்ரதன் ஹதீஸ் 1417)

முன்னதாக பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த கூற்றையும் நாம் கேட்டு விட்டோம். நல்ல விஷயங்களை கேட்டு செயல்படுவதும் தீய விஷயங்களிலிருந்து விலகி இருப்பதும் ஸதகாவாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே இந்த விஷயங்களை நாம் எப்போதும் நம் கண்

முன்னால் வைக்க வேண்டும். அத்துடன் ஏற்கனவே கூறப்பட்டிருந்நது போன்று இதையும் நான் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்திஃபார் மற்றும் துஆ செய்வதன் பக்கம் கவனம் செலுத்துவதும் மிகவும் அவசியமானதாகும். உள்ளத்திலிருந்து எழுகின்ற இஸ்திஃபார் வருங்காலத்தில் நாம் செய்ய இருக்கின்ற பாவத்தில் இருந்தும் நம்மை காப்பாற்றுகின்றது. மேலும் அல்லாஹ்வின் கருணையையும் பொங்கி எழச் செய்கின்றது. அவனது நெருக்கத்தையும் பெற்றுத் தருகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: உங்களில் எவருக்கு துஆவிற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளதோ அவருக்கு கருணையின் கதவுகள் திறக்கப்படு–கின்றன. அல்லாஹ்வுடன் நாம் வேண்டுபவற்றில் அவனுக்கு மிகவும் விருப்பமானது அவனது பாதுகாப்பை வேண்டுவதாகும். (சுனன் திர்மிதி கிதாபுத் த∴வாத் பாபு மன் ∴பதஹ மின்கும் பாபுத் துஆயி....... ஹதீஸ் 3485) எனவே அல்லாஹ்விடம் அவனது பாதுகாப்பை கேட்க வேண்டும். அவனது அடைக்கலத்தில் வந்து விட வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: துஆ இப்போது வந்திருக்கின்ற சோதனைக்கு எதிரிலும், வரவிருக்கின்ற சோதனைக்கு எதிரிலும் பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே அல்லாஹ்வின் அடியார்களே, துஆ செய்வதை கட்டாயமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 357 முஸ்னது மஆஸ் பின் ஜபல் (ரலி) ஹதீஸ் 22394. ஆலமுல் குதுபு பைருத்தில் 1998 -ல் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். கவனமின்மையால் ஏற்படும் பாவம் வெட்கப்படுகின்ற பாவத்தை விட பெரிதாக இருக்கின்றது. இந்த பாவம் விஷத்தன்மை உடையதாகவும், கொலை செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது. தவ்பா செய்பவர் முற்றிலும் பாவம் செய்யாதவரைப் போன்றே ஆகிவிடுகின்றார். எவர் உண்மையான தவ்பாவை செய்கின்றாரோ இஸ்திஃபார் செய்கின்றாரோ தமது பாவங்களுக்காக மன்னிப்பு கோருக்கின்றாரோ இனி வருங்காலத்தில் பாவங்கள் செய்யாமல் இருப்பதற்கு உறுதிமொழி எடுக்கின்றாரோ அவர் முற்றிலும் பாவம் செய்யாதவரைப் போன்றே ஆகிவிடுகின்றார். எவருக்கு நான் என்ன செய்கின்றேன் என்பதே தெரியவில்லையோ அவர் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கின்றார். எனவே கவனமின்மையை விட்டு விடுவது அவசியமானதாகும். நாம் என்ன செய்கின்றோம்? என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். நமது செயல் எவ்வாறிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் பாவங்களில் இருந்து தப்வா செய்யுங்கள். இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருங்கள். எவர் தவ்பா செய்து தமது நிலைமை–களை சரி செய்து கொள்வாரோ அவர் மற்றவர்களுக்கு எதிரில் காற்றப்பாற்றப்படுவார். எனவே எவர் சுயமே தன்னை சீர்திருத்திக் கொள்கின்றாரோ அந்த நபருக்கே துஆ பலனைத்தரும். எவர் இறைவனுடன் உண்மையான தொடர்பை நிலைநாட்டுகின்றாரோ அவருக்கே துஆ பலனைத்தரும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிமார்கள் எவருக்காவது பரிந்துரை செய்தாலும் கூட எவருக்காக அவர்கள் பரிந்துரை செய்தனரோ அந்த நபர் தன்னை சீர்திருத்தாமல் இருந்தால் கவனமற்ற வாழ்விலிருந்து வெளியேறாமல் இருந்தால் அந்த பரிந்துரை கூட அவருக்கு பயனளிக்காது. (மல்∴பூஸாத் தொகுதி 5 பக்கம் 230; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக! நாம் துஆவின் உண்மை நிலையை புரிபவர்களாக ஆவோமாக! கலப்பற்ற தன்மையுடன் இறைவன் முன்னால் குனிபவர்களாக நாம் ஆவோமாக! இஸ்திஃபாரின் பக்கம் நாம் கவனம் செலுத்துபவர்–களாக இருப்போமாக! நமது கடந்த கால பாவங்களுக்காக அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு அவனிடம் மன்னிப்பை வேண்டுபவர்களாக நாம் இருப்போமாக! வருங்காலத்தில் பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான உறுதிமொழியை எடுத்துக் கொண்டு பிறகு அதற்காக முழுமையாக முயற்சி செய்பவர்களாக நாம் ஆவோமாக! துன்பங்களை அகற்றுவதற்காக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படு–கின்ற ஸதகாக்களை வழங்குபவர்களாக நாம் இருப்போமாக! அல்லாஹ் எப்போதும் நம்மை தனது அடைக்கலத்தில் வைப்பானாக! பகைவர்கள் மற்றும் ஒவ்வொரு எதிரியின் தாக்குதல்களிலிருந்தும் அவன் நம்மை பாதுகாத்து அவர்களது தாக்குதலை அவர்கள் பக்கமே அவன் திருப்பி விடுவானாக! நாம் எப்போதும் அல்லாஹ்வின் அச்சத்தை தமது உள்ளத்தில் வைத்திருக்கின்ற அவனது அடியார்களில் ஒருவராக இருப்போமாக! மேலும் ஹஸ்ரத் நபிகற் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு நாம் வாரிசு ஆவோமாக! மேலும் அதில் பங்கு பெறுபவர்களாக ஆவோமாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இது மதிப்பிற்குரிய சஅதா பர்தாவி சாஹிபா உடையதாகும். இவர் மரீ பர்தாயி சாஹிபுடைய மனைவி ஆவார். டமாஸ்கஸில் உள்ள ஹோஸ் அரபு என்ற பகுதியில் இவரது வஃபாத் நிகழ்ந்தது. இவரது வீட்டில் வெப்பத்திற்காக வைக்கப்பட்டிருந்த கேஸ் கசிந்ததன் காரணமாக நெருப்பு பற்றியதன் விளைவாக இவர்கள் எரிந்து விட்டார்கள். அவர்கள் மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் காரணமாக அவரது உடல்நிலை நன்றாக இருந்தது. இந்த சம்பவத்தில் அவர்கள் மிகவும் பொறுமையை கடைபிடித்தார்கள். இறைவனைப் புகழ்வதிலும் அவனுக்கு நன்றி செலுத்துவதிலும் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். எல்லாரிடமும் இறைவனது நியதியில் நான் திருப்தி அடைகின்றேன் என்று அவர்கள் கூறி வந்தார்கள். நான்கு நாட்கள் கழிந்த பிறகு மருத்துவர்கள் கூறியதற்கிணங்க அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக 10 ஜனவரி 2017 –ல் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

இவர்கள் இவர்களது கணவர் பைஅத் செய்த பிறகு 2004 ல் பைஅத் செய்தார்கள். கலப்பற்ற மனத்தூய்மையிலும் நன்றியுணர்விலும் தமது கணவர் மற்றும் பிள்ளைகளை விட மிகவும் முன்னேறிச் சென்று விட்டார்கள்.

இவர்களது கணவரான மதிப்பிற்குரிய மரீ பர்தாயி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: பைஅத் செய்து சில நாட்கள் கழிந்த பிறகு அவர்கள் கருவுற்றார்கள். அவர்கள் கருவுற்றிருந்த நிலையில் ஒரு நாள் மாடிப்படியிலிருந்து கீழே விழுந்து விட்டார்கள். கரு கலைந்திருக்குமோ என்ற அபாயம் இருந்தது. இரவில் தூங்கும் போது அவர்கள் கனவில் பார்த்தார்கள். ஒரு நபர் வானத்திலிருந்து குரல் கொடுத்தார் என்று அவர் கூறினார். அஞ்ச வேண்டாம். அல்லாஹ் இந்த சிசுவைப் பாதுகாப்பான் என்று குரல் வந்தது. அப்போது அவருக்கு மகன் பிறந்தால் அந்த மகனுக்கு அஹ்மது என்று பெயர் வைக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்–பட்டது. பிறகு அவ்வாறே பெயர் வைக்கப்பட்டது. இந்த குழந்தைக்கு ஆறு வயதான போது இதேபோன்ற ஒரு கனவை அவர்கள் பார்த்தார்கள். அதாவது வானத்திலிருந்து ஒரு குரல் வருகின்றது. அதில் அல்லாஹ் இந்த குழந்தையை பாதுகாப்பவனாக இருக்கின்றான் என்று கூறப்பட்டது. அதற்குப் பிறகு இவர்கள் ஒரு நாள் இந்த சிறுவனுடன் High Way –ன் ஓரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று இந்த சிறுவன் அவரிடமிருந்து தனது கையை விடுவித்துக் கொண்டு சாலையை கடந்து செல்ல ஆரம்பித்தான். அந்த தருணத்தில் இவர்கள் தமது தலையைப் பற்றியவாறு கண்களை மூடிக் கொண்டார்கள். கண்களை திறந்து பார்த்த போது இவர்களது மகன் மிகவும் நலமுடன் சாலையின் மறுபுறத்தை அடைந்து கை அசைத்துக் கொண்டிருந்–தான். இந்த தருணத்தில் தான் கண்ட கனவு அவர்களுக்கு நினைவுக்கு வந்தது.

இவர்களது கணவர் கூறுகின்றார்: இவர்கள் நன்மையில் முன்னேறிச் செல்பவர்களாக இருந்தார்–கள். எனக்கு எப்போதெல்லாம் ஒரு நன்மையை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்து அதை நான் எனது மனைவிக்கு கூற வேண்டும் என்று நினைக்கும் போது எனது மனைவியும் எனக்கும் இதே போன்ற எண்ணம் வந்தது. எனவே நான் இந்த நன்மையை செய்வதை ஒருபோதும் நீங்கள் எதிர்க்க மாட்டீர்கள் என்ற எண்ணத்தில் அதனை நான் செய்து விட்டேன் என்று கூறி வந்தார்கள். அதாவது கணவர் இந்த நன்மையை செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே இவர்கள் அதை செய்து முடித்திருப்பார்கள்.

இவர்களது கணவர் கூறுகின்றார்கள்: இதுபோன்ற சம்பங்கள் இல்லாமல் எந்தவொரு வாரமும் கழியவில்லை.

ஜெர்மனியிலுள்ள இவர்களது மருமகனான முஸ்அப் ஸுஅய்ரீ சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் நல்ல பண்புகளை உடைய சாதாரண இயல்பை உடைய பெண்மணியாக திகழ்ந்தார்கள். எவரிடமும் இவர்களுக்கு பகைமை இருந்ததில்லை. மிகவும் தாராளமாக வழங்கக் கூடியவராகவும் அவர்கள் இருந்தார்கள். மிக அதிகமாக தொண்டு புரிபவர்களாக அவர்கள் இருந்தார்கள். இவர்களது கணவர் 2009 – 2013 வரை கைது செய்யப்பட்டிருந்த தருணத்தில் இவர்கள் மிகவும் உழைத்து தமது குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி வந்தார்–கள். எல்லோருக்கும் ஆதரவளித்து வந்தார்கள். கடந்த காலத்தில் செலுத்த வேண்டியதிருந்த கடனையும் இவர்கள் செலுத்தினார்கள். எல்லா நன்மையான காரியங்களிலும் அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள். எல்லாரிடமும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து வந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார்கள். இவர்களது அடக்கம் டமாஸ்கஸிலுள்ள ஹோஸ் அரபு என்ற பகுதியில் நடைபெற்றது. இவர்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாக அஹ்மதிகளும், அஹ்மதி அல்லாதவர்களும் இவர்களுக்காக தனித்தனியாக ஜனாஸா தொழுதனர்.

அல்லாஹ் மர்ஹூமா அவர்களை மன்னிப்பானாக! அவர்களது தகுதியை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளுக்கும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பை நிலைநாட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 23-30 March 2017 Issue No. 12-13

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

(6 -வது பக்கத்தின் தொடர்ச்சி...)

நான் அறிவேன். எனவே, நான் மிகவும் கடினமான ஒரு கேள்வியை இறுதியாக கேட்டு விட்டு அத்துடன் முடித்து கொள்கின்றேன் என்று கூறினார். பிறகு ஹுஸூர் அவர்களிடம் கனடாவாசிகளுக்கு இஸ்லாம் தொடர்பாக அவர்கள் எதைப் புரிய வேண்டிய தேவை இருக்கின்றது? என்பதை பற்றி சுருக்கமாக நீங்கள் கூறுங்கள். அதன் மூலமாக இந்த பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட வேண்டும். குழப்பங்கள் குறைய வேண்டும் என்று அவர் கூறினார்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: பாருங்கள் நீங்கள் பல்வேறு வழிமுறைகள் மூலம் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். இந்தப் பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதற்கு அரசாங்கங்கள் அதிகமாக ஆலோசனைகளை முன் வைக்கின்றன. சட்டமும் கூட இயற்றப்பட்டு வருகின்றது. எதுவரை என்றால் வல்லரசுகள் கூட இவ்விஷயத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்கின்றன. உண்மையில் இவ்விஷயத்தில் அவர்கள் அக்கறையுடன் செயல்படுகின்றனர். ஏனென்றால் அவர்கள் ISIS மீது கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் அல்லது கட்டுபாடுகளை விதிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர். உங்களுக்கு தெரியும். அதாவது அந்தப் பிரிவை முடிவுக்கு கொண்டு வந்து விட வேண்டும். என்பதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர். ஆனால், அந்த அளவு வேகமாக அவர்கள் இந்தப் பணியைச் செய்யாமல் இருக்கின்றனர்.

பிறகு உங்களது அடுத்த கேள்வி இஸ்லாம் இந்த பிரச்சனையை எவ்வாறு தீர்த்து வைக்கும்? என்பதாகும். இதற்கான பதில் இதுவாகும். நீங்கள் இந்த விவகாரத்தில் உங்கள் தரப்பில் இருந்து உலக முயற்சிகள் அனைத்தையும் செய்து விட்டீர்கள். இப்போது நீங்கள் செய்யாமல் விட்டு விட்ட ஒரே விஷயம் இதுவாகும். அதாவது இஸ்லாமிய போதனைகள் மூலமாக இந்த விவகாரத்திற்கான தீர்வைக் காண்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அந்த போதனை உண்மையான முஸ்லிம்களின் செயலளவிலான முன்மாதிரியில் தென்படுகின்றது. அஹ்மதிகளாகிய நாங்கள் உண்மையான முஸ்லிம்களாக இருக்கின்றோம். முழுமையான முறையில் சரியான பொருளில் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும். அந்த அரசாங்கமும் தமது சுய பயன்களை பார்க்கக் கூடாது. குறிப்பாக சில அரபு நாடுகள் உள்ளன அல்லது ஒரு சில நாடுகள் உள்ளன. அவர்களிடம் எண்ணற்ற இயற்கை வளங்கள் உள்ளன. அவர்கள் சரியான பொருளில் நீதியையும் நேர்மையையும் கண் முன் நிறுத்தி செயல்பட்டால் பிறகு இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று நம்மால் கூற முடியும். பல பில்லியன் டாலர்களுக்கு தளவாடங்களும் ஆயுதங்களும் சவூதி அரேபியாவிற்கு விற்கப்பட்டு வருகின்றது என்பதை பற்றிய உங்களுக்கு தெரியுமா? இது எதற்காக? என்ற கேள்வி எழுகின்றது. இது யமனுக்கு எதிராக போர் புரிவதற்காகவேயாகும். ஆனால் அரசாங்கங்கள் நாங்கள் மற்ற அரசாங்கங்களுடன் நீதியுடன் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றோம் என்று கூறுகின்றன. அந்த ஆயுதங்களை அப்பாவி மக்களைக் கொல்வதற்காகவும் அப்பாவி நாட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்காகவும் அல்லது தங்களது விருப்பம்போல் அவற்றை எங்கு வேண்டுமானாலும் பயன்படுத்துவதில் எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என்று அந்த அரசாங்கங்கள் கூறுகின்றன. முழுமையான நீதி இல்லை என்பதே இதன் பொருளாகும். ஆனால் முழுமையான நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதே திருக்குர்ஆனின் போதனை ஆகும். இதற்காக உங்களுக்கு உங்களுக்கே எதிராகவே சாட்சி கூற வேண்டியது வந்தாலும் அல்லது உங்களது பெற்றோர்களுக்கு எதிராகவோ அல்லது நெருங்கிய உறவினர்களுக்கு எதிராகவோ சாட்சி கூற வேண்டியது வந்தாலும் சரியே. எனவே, இந்த போதனைக்கு ஏற்ப செயல்பட்டால் பிறகு இந்த பிரச்சனைக்கான தீர்வைக் காண முடியும். அவ்வாறு செய்யவில்லையென்றால் பிறகு எந்த உலக சட்டமும் இந்த பிரச்சனையை தீர்த்து வைக்க முடியாது.

______

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம்

ஹோமியோபதி மருத்துவம் தனது எளிய கொள்கைகளைக் கொண்டு தினந்தோறும் மருத்துவ உலகில் பெரும் சாதனை புரிந்து வருகின்றது. குறைந்த செலவில் பக்க விளைவுகள் இல்லாத, விரைவாகவும் முழுமையாகவும் குணமளிப்பதை தன் சிறப்புத் தன்மையாகக் கொண்டுள்ளது. இது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம் டாக்டர் துரைராஜ் அவர்களின் தலைமையில் மேலப்பாளையம் ரஹ்மானிய்யா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 5.03.2017 ஞாயிறு அன்று காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை நடைபெற்றது.

அஹ்மதிய்யா மகளிரணி தலைவி ஆயிஷா மெஹ்ரூன் வரவேற்புரை வழங்க, வைகறை ஹோமியோபதி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மருத்துவர் டாக்டர் பியூலா திலகவதி சிறப்புரையாற்றினார். மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் நாஸிர் அஹ்மது, மாவட்ட பொறுப்புப் பிரச்சாரகர் தாஹிர் அஹ்மது, ரஹ்மானிய்யா மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. மஜீத் ஆகியோர் வாழ்த்துரை நல்கினர். பின்னர் பிரார்த்தனையுடன் முகாம் தொடங்கியது.

முகாமில் மருத்துவர்கள் டாக்டர் துரைராஜ், டாக்டர் பியூலா, டாக்டர் மகாராஜ லட்சுமி, டாக்டர் சங்கீதா, திரு. ஆறுமுகம், டாக்டர் நாஸிரா, டாக்டர் அம்னா நாஸிர் ஆகியோர் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கினர். இம்முகாமில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மொத்தம் 139 பேர் பங்கு பெற்று பயனடைந்தனர். முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மகளிரணி செய்திருந்தது. பிரஸ் மற்றும் மீடியா செயலர் பஷீர் அஹ்மது நன்றியுரை வழங்கினார்.

## இரத்த தான முகாம்

மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இளைஞர் அணி மற்றும் நெல்லை லைஃப்லைன் இரத்த வங்கியும் இணைந்து மஸ்ஜித் நாஸிர் பள்ளிவாயிலில் இரத்த தான முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் மாவட்ட அமீர் A.P.Y. அப்துல் காதிர் சாஹிப் தலைமையுரையாற்றினார். மாணவர் S. நஸீருத்தீன் கிராஅத் ஓதினார். மாவட்ட இளைஞரணித் தலைவர் M. முஹம்மது ஃப்ஸலே இலாஹி சாஹிப் வரவேற்புரை வழங்கினார். நெல்லை லைஃப்லைன் இரத்த வங்கியின் திரு. மாறன் இரத்த தானம் தொடர்பாக அறிமுக உரையாற்றினார். மாவட்ட பொறுப்புப் பிரச்சாரகர் மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப், உள்ளூர் அமீர் A. நாஸிர் அஹ்மது சாஹிப் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலப்பாளையம் இளைஞரணித் தலைவர் A. சம்சுல் ஆலம் சாஹிப் நன்றியுரை நல்கினார்.

பிறகு திருநெல்வேலி லைஃப்லைன் இரத்த வங்கியின் குழுவினர் இரத்த சேகரிப்புப் பணியை மேற்கொண்டனர். ஏறத்தாழ 17 சகோதரர்கள் இரத்த தானம் செய்தனர்.

இறுதியில் லைஃப்லைன் இரத்த வங்கியின் திரு. மாறன் மற்றும் குழுவினர்களுக்கு ஜமாஅத் சார்பாக மாவட்ட அமீர் மற்றும் உள்ளூர் அமீர் அவர்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

(தகவல் : A. பஷீர் அஹ்மது – பத்திரிகைத் துறைச் செயலர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad